பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 19 | வெள்ளிக்கிழமை | 07.04.2023 | கதிர் 148

# ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு


## இதற்கென மூவர் கொண்ட ஆணைக்குழு உருவாக்கப்படும்

ஊழலுக்கு எதிரான சட்டமூலம் வர்த்தமானியில் வெளயிடப்பட்டுள்ளது என்று அரசஅச்சகம்தெரிவித்துள்ளது.

சொத்துகள் மற்றும் பொறுப்புகளுடன் தொடர்பான ஊழல் மோசடி - தவறுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்களைக் வெளக்கொணர்வ-தும் விசாரணை செய்வதும் இந்தச் சட்டமூலத்தின் முக்கியமான இலக்கு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய வகையில் சுயாதீன ஆணைக்குழு ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது.

☞ 2



## இது ரகசியம் அல்ல!

தமிழ் - சிங்கள புதுவருடம் அடுத்த வாரம் கொண்டாடப்படவுள்ளது. இந்த நேரத்தில் ஆட்சியாளர்கள் நல்ல செய்திகளாகவே மக்களைச் சென்றடையும் வகையில் பார்த்துக்கொள்கிறார்கள். டொலர் விரை குறைந்துள்ளது. காஸ் விலை குறைந்துள்ளது. அது மட்டும்தான் ஆயிரம் ரூபாயால் குறைந்தது. மற்றெல்லாம் 100 ரூபாய் ஏறினால் 10 அல்லது 15 ரூபாய்தான் குறைகிறது. அரிசி, சீனி, மா, பால் மா விலைகளும் குறைகின்றன. பெற்றோல் டீசல் விலைகள் குறைந்திருக்கின்றன. பொருட்களின் விலைகள் எல்லாம் எகிறிய அளவிற்குக் குறையவில்லை என்றாலும் பொருள் விலை குறைகிறது என்பதே மகிழ்ச்சியான செய்திதானே!

ஆட்சியாளர்கள் இப்படி மக்களை மகிழ்ச்சிப்படுத்திக்கொண்டிருப்பதன் பின்னால் பெரிய வெடிகுண்டாக வைத்திருக்கிறார்கள் என்கிற அச்சமும் பொருளாதார நிபுணர்கள பக்கம் இருந்து அவிழ்த்துவிடப்படுகின்றது. பொருளாதாரச் சரிவில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின்

☞ 2

# சஜித் அணி 50 எம்.பிக்கள் ரணில் அரசுடன் இணைவராம்



ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து 50 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைய எந்நேரமும் தயாராகவுள்ளனர். அமைச்சுப் பதவி பெறுவது அவர்களின் நோக்கம் அல்ல. ரணிலின் சிறந்த ஆட்சியாலும் நாட்டு மக்கள் மீதான அக்கறையாலுமே அவர்கள் அரசுடன் இணையத் தயாராகியுள்ளனர்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற

☞ 3

# புதிய அடக்குமுறைச் சட்டத்தினை தடுக்க தூதரகங்களுக்கு அறிக்கை

## சிவில் சமூகம் ஒன்றியம் கையளித்தது

நாட்டில் உள்ள தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலய அலுவலகங்கள் சிலவற்றுக்கு சிவில் சமூக ஒன்றியம் 8 விடயங்கள் அடங்கிய அறிக்கையை வியாழக்கிழமை கையளித்தது.

தற்போதைய அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாமலாக்கி, புதியஅடக்குமுறைச்சட்டத்தைக்கொண்டுவருவதைத் தடுக்குமாறு கோரி இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்புசுவிட்சர்லாந்துதூதரகத்துக்குச் சென்ற குறித்த தரப்பினர், தூதரக அலுவலக அதிகாரியிடம் தமது அறிக்கையைக் கையளித்தனர்.

பின்னர் அவர்கள் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்துக்குச் சென்று பிரதி உயர்ஸ்தானிகரிடம் அறிக்கையைக் கையளித்ததுடன், கொழும்பிலுள்ள பாலஸ்தீன், மாலைத்தீவு மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தூதரக அலுவலகங்களிலும் அறிக்கையை வழங்கினர்.

ரஷ்ய தூதரக அலுவலகத்துக்கும் சிவில் சமூக ஒன்றியத்தினர் 8 விடயங்கள் அடங்கிய அறிக்கையைக் கையளித்துள்ளது.

நெதர்லாந்து உயர்ஸ்தானிகராலயத்துக்கும் அவர்கள் சென்று அறிக்கை வழங்கியதுடன் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு முன்பாகச் சென்று அமைதியான முறையில் எதிர்ப் பிலும் ஈடுபட்டனர். (02)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மே மாதம் நிறைவேற்றத் திட்டம்

## சில வாரங்களுக்கு மட்டுமே ஒத்தி வைப்பு என்கிறார் நீதி அமைச்சர் ஏப்ரல் 25இல் துறைசார் மேற்பார்வைக்குழுவில் கலந்துரையாடல்

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மே மாத இறுதிக்குள் நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரச மைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ. ஏப்ரல் 25இல் துறைசார் மேற்பார்வைக் குழுவில் இது பற்றிக் கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நீதி அமைச்சில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

☞ 3

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை

# திரும்பப் பெறுவதாக இருந்தால் எழுத்துபூர்வமாக அறிவியுங்கள்



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிக்கை

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைவாபஸ்பெறுவதாக இருந்தால் அதை எழுத்து பூர்வமாக அரசு அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று விசேட அறிக்கை விடுத்துகோரிக்கைவிடுத்துள்ளார்.

☞ 3

# 3 பொருள் விலைகள் குறைப்பு

லங்கா சதொச நிறுவனம்பொதுமக்களுக்குவழங்கப்படும் சில அத்தியா வசிய நுகர்வுப்பொருட்களின்விலையைக் குறைத்துள்ளது.

எதிர்வரும்தமிழ்மற்றும் சிங்களபுத்தாண்டுகாலப்பகுதியில் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதன்படி, கடந்த வாரம் விலை குறைக்கப்பட்ட 12 அத்தியாவசியப் பொருட்களுக்கு மேலதிகமாக, மேலும் 03 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இன்றுமுதல்நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும்

☞ 3

# குடாநாட்டில் பாண் விலை இன்று முதல் ரூ. 10 குறைப்பு

யாழ்ப்பாணத்தில்,இன்று முதல் பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப் படவுள்ளதாக, கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் க.குணரத்தினம் தெரிவித்தார்.

சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி பொருட்களின் விலைகள் குறைக்கப்படாது என ஊடகங்களில், வெளியாகிய செய்திகளை அடுத்து, கூட்டுறவு வெதுப்பக

☞ 3

# ராஜபக்ஷக்களை வீழ்த்திய சூழ்ச்சி உரிய நேரம் வெளிப்படுத்தப்படும்

## பொது ஜன பெரமுன சூளுரை

மஹிந்தவையும், கோட்டாவையும் வீழ்த்து-வதற்கு சூழ்ச்சி புரிந்தவர்கள் உரிய நேரத்தில் அம்பலப்படுத்தப்படுவார்கள் என்று பொது ஜன பெரமுன தெரிவித்துள்ளது.

நாமல் ராஜபக்ஷ முகநூல் ஊடாகச் சில நாள்களின் முன்னர் கருத்துத் தெரிவிக்கும்போது, ராஜபக்க்களின் ஆட்சியை வீழ்த்து-வதற்கு மூன்றாம் தரப்பின் சூழ்ச்சியொன்று இருந்தது என்று

☞ 3

# ராஜபக்ஷக்களை வீழ்த்திய மூன்றாவது சக்தி ரணிலா?

## நாலககொடஹேவா சந்தேகம்

ராஜபக்ஷக்களைவீழ்த்துவதற்குசதிசெய்தமூன்றாவது சக்திஜனாதிபதிரணிலாஎன்று சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி. நாலககொடஹேவாசந்தேகம் வெளியிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ தனது, முகநூல்

☞ 3

# நாணய நிதிய ஒப்பந்தம் படுமோசமானது இனி முழு கட்டுப்பாடும் வோஷிடனிடம்

## மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் கப்ரால் காட்டம்

(தன்வீன்)

இனி எல்லாவற்றையும் வோஷிங்டனிடம் முழுக் கட்டுப்பாடும், அந்தளவிற்குப் படுமோசமானது தற்போதைய சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம்.

இவ்வாறு தெரிவித்தார் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிரான மனுவொன்றின்விசாரணைக்காக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு வியாழக்கிழமை வந்திருந்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம்பேசினார். அங்குஅவர்தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு

☞ 3

# விடைத்தாள்கள் மதிப்பிட நாளொன்றுக்கு ரூ. 2,000

## வழங்குவதற்கு அனுமதி

கல்வி பொதுத் தராதர உயர்தரபரீட்சைவிடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும்மதிப்பீட்டாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 2ஆயிரம் ரூபா கொடுப்பனவாக செலுத்துவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித்ஜயசுந்தரதெரிவித்தார்.

அத்துடன், குறித்த ஆசிரியர்களுக்கு

☞ 3

# நிரம்பி வழியும் அடையாளம் தெரியாத சடலங்கள்

அடையாளம் காணப் படாத நிலையில் பொலிஸாரால் கொண்டுவரப்படும் சடலங்களை இனிமேல் பொறுப்பேற்க முடியாது என்றுகளுபோவிலபோதனா வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் களுபோவில போதனா வைத்தியசாலை இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

அடையாளம்

☞ 3

# எல்லைக் கிராமமான மணற்கேணியை மீட்டெடுக்க 45 வருடங்களின் பின்னர் 5 குடும்பங்கள் பிரயத்தனம்

**(விஜயரத்தினம் சரவணன்)**

பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான, முல்லைத்தீவு - மணலாறு, மணற்கேணிக் கிராமத்தை மீட்டெடுக்க, 40 வருடங்களின்பின்னர் காணி உரிமையாளர்கள் சிலர் கடுமையான பிரயர்த்தனத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மணற்கேணிப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு படையினரால் வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அதைத் தொடர்ந்து, இதுவரையில் அப் பகுதியில் அவர்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை.

இந்நிலையில் மணற்கேணிப் பகுதியில் காணியுள்ள, காணி உரிமையாளர்கள் ஐவர் வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு வருகை தந்து, தமது காணிகளைத் துப்பரவுசெய்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குஅனுமதிகோரினர்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், மணற்கேணியில்காணிகளைக் கொண்டிருக்கும் ஏனைய உரிமையாளர்களையும் தாம் தேடிவருகின்றனர் என்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

மணலாறு - மணற்கேணிப் பகுதியில் எம்மைப் போன்று இன்னும் பல தமிழ் மக்களுக்குக் காணிகள் உள்ளன.

இந்தமணற்கேணிமத்திய வகுப்பு காணித் திட்டத்தில் காணிகள்

☞ 3




தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir



## நேரில் பாராட்டு தெரிவித்த உலக வங்கிப் பிரதிநிதிகள்

கொழும்பு, ஏப்.07

இலங்கையின் அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத்திட்டத்தின் முன்னேற்றங்களுக்கு உலகவங்கிபிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத்திட்டம் தொடர்பில் உலக வங்கி பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற இறுதிச் சுற்றுபேச்சு, தேசியபாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் நேற்று (06) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற போதே உலக வங்கி பிரதிநிதிகள் மேற்கண்டவாறு பாராட்டுத் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற வரவு - செலவு திட்ட அலுவலகத்தை நிறுவுதல், அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச்செய்தல், நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கும் முறைமை, சமூகப் பதிவு போன்ற இலங்கையின் அபிவிருத்திகொள்கைக்கான செயற்பாட்டுத் திட்டத்தை முழுமையாக்குவதற்கு அவசியமான எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அவற்றுக்கு அவசியமான கால எல்லை என்பன தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது இலங்கையின் அபிவிருத்திகொள்கை முன்னெடுப்புக்களுக்கு உலக வங்கி வழங்கும் ஒத்துழைப்புக்குப் பாராட்டுத் தெரிவித்த சாகல ரத்நாயக்க இந்த வேலைத்திட்டத்தை சாத்தியமாக்கிக்கொள்வதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

உலக வங்கியின் இந்த நாட்டுக்கான முகாமையாளர் சியோ கன்தா உள்ளிட்ட உலக வங்கி பிரிதிநிதிகளும், பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர் .எச் .எஸ். சமரதுங்க உள்ளிட்ட அதிகாரிகளும் இந்தப் பேச்சில் கலந்துகொண்டனர். (02)

### ரைஸ் குக்கரின் மூடியால்

## மகளின் முகத்தில் சூடுவைத்த தந்தை

ரைஸ்குக்கரின்மூடியால் தந்தை, தனது 16 வயது மகளின் முகத்தில் சூடு வைத்த சம்பவம் பின்வத்த, வடுபசல் வத்த பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர். பின்வத்த, வடுபசல் வத்த பிரதேசத்தில் வசிக்கும்16வயதுடையசிறுமி தீக்காயங்களுடன் நேற்றிரவு தனது தாயுடன் சென்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்பின்னர் பாணந்துறை ஆதார வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு 7.45 மணியளவில் சிறுமி சோறு சமைத்துக் கொண்டிருந்தபோது, வீட்டுக்கு வந்த தந்தை ரைஸ் குக்கரின் மூடியைத் திறந்து பார்த்து ஏன் இவ்வளவு சோறு சமைக்கிறீர்கள் என்று கேட்டு கொதித்துக் கொண்டிருந்த ரைஸ் குக்கரின் மூடியால் மகளின் முகத்தில் சூடு வைத்துள்ளார்என்றுதெரிவிக்கப்படுகின்றது.

முகம் மற்றும் கன்னங்களில் தீக்காயங்களுடன் சிறுமி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்என்று பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரான தந்தையைக் கைது செய்ய பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (02)

## பொலிஸ் நிலையத்தில் கீழே விழுந்த நபர் சாவு

களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுஒன்றுதொடர்பில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்த ஒருவர் திடீரென கீழே விழுந்து உயிரிழந்துள்ளார் என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை தெற்கு சேனவிரத்ன பிளேஸைச் சேர்ந்த கஜநாயக்க முதலிகே நாலக துார என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காணி ஒன்று தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார் எனவும், இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டிருந்தபோதுதிடீரெனமயங்கி விழுந்துள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதையடுத்துகளுத்துறை போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

களுத்துறை தெற்கு தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் ருவன் விஜேசிங்க தலைமையில்விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (02)

## நிதி மோசடியில் ஈடுபட்ட போலி வைத்தியர் கைது

வைத்தியர் போல்நடித்து வெளநாடுகளுக்கு நபர்களை அனுப்புவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு முன்பாக வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் பொரளைப் பொலிஸார் நடத்திய விசாரணையில், ஆஸ்திரேலியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி, கொழும்புதேசியவைத்தியசாலையினுள் வைத்தியர் போல் நடித்து இந்த நபர் ஏற்கனவே ஒருவரிடம் 70 ஆயிரம் ரூபாவை மோசடி செய்தமைதெரியவந்துள்ளது.

சந்தேகநபர் பன்னல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவர் எனவும், அவர் வத்துபிட்டியல பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்து வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொரளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### சர்வதேச கடல் எல்லையில்

## 196 கிலோ ஹெரோயினுடன் கைதான ஐவரும் விடுதலை

196 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயினுடன் சர்வதேச கடல் எல்லையில் கைது செய்யப்பட்ட 5 பிரதிவாதிகளை விடுதலை செய்து நீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

குறித்த பிரதிவாதிகள் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் கடற்படையினரால் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயின் இறக்குமதி, கடத்தல் மற்றும் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கில், நீதிபதி ஆதித்ய பட்பெந்திகே தலைமையிலான மூவரடங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இன்று (6) இந்தத் தீர்ப்பை வழங்கியது.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரி வின் அதிகாரிகள் வழங் கிய சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளதாலும், குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படாததாலும் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்வதாக நீதிபதிகள் குழாம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. (02)

## டயனா கமகேக்கு எதிரான வழக்குத் தீர்ப்பு ஏப். 24இல்

குடி[illegible] சட்டத்தின்கீழ்குற்றங்களுக்காக இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவை கைது செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதா? இல்லையா? என்பது தொடர்பிலான தீர்மானம் ஏப்ரல் 24 அறிவிக்கப்படவுள்ளதாககொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் அறிவித்துள்ளார்.

குற்றவியல்நடைமுறைச் சட்டத்தின் 32ஆவது பிரிவின் கீழ் டயனாகமகேவைகைது செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனுதாரர் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம் மேற்படி உத்தரவை பிறப்பித்தது.

சிவில்செயற்பாட்டாளரான [illegible] றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே இலங்கைப் பிரஜை இல்லை என்றும், அவர் பிரித்தானிய பிரஜை எனவும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின்தரவுகளின்அடிப்படையில் தெரியவந்துள்ளது என்று குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோது அவரது வீசா 2014 ஆம் ஆண்டுடன் காலாவதியாகி உள்ளதாகவும் குடிவரவு குடியகல்வு திணைக்களம்நீதிமன்றத்துக்கு அறிவித்தது, நயனா சமன் [illegible] என அழைக்கப்படும் நடாா கெகனதுர பிரித்தானிய பிரஜையாவார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

டயனா கமகே இரட்டை குடியுரிமை கொண்டவர் அல்லர். பிரித்தானிய குடியுரிமையுடன் 2014ஆம் ஆண்டுஜனவரிமாதம்போலி பிறப்புச்சான்றிதழ் மற்றும் தேசியஅடையாளஅட்டையை பெற்றுபோலிக்கடவுச்சீட்டை அவர் பெற்றுள்ளார் என்ற விடயத்தையும் குடிவரவு குடியகல்வுதிணைக்கள அதிகாரிகள் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மூலம்நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

## புளியம்பொக்கனை பொங்கலில் பகலில் திருடப்பட்ட ஓட்டோ மீட்பு






கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்னை நாகதம்பிரான் ஆலயத்தில் புதன் கிழமை பொங்கல் உற்சவத்தில் மக்கள் அதிகமாக காணப்பட்டபகுதியில்இருந்து திருடப்பட்ட ஓட்டோவை சில மணி நேரத்தில் பொலிஸார் மீட்டனர். சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்தனர்.

இதேவேளை பொங்கல் இரவில்பெண் ஒருவர் தங்கச் சங்கிலியினை அறுத்த குற்றச்சாட்டின் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து இரண்டு தங்கச்சங்கிலிகள் பொலிசாரல் மிட்கப்பட்டனஎன்றுபொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்களும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## வீடு கையளிப்பு



புலம்பெயர் தமிழர் மற்றும் வன்னி அறக்கட்டளையின் நிதியில் தரைப் படையினரால் அமைக்கப்பட்ட வீடு அதன் பயனாளிரிடம் யாழ். மாவட்ட தரைப்படைக் கட்டளைத் தளபதியால் வியாழக்கிழமை கட்டுடையில் கையளிக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்ட பகுதியில் நடந்தசம்பிதாயபூர்வநிகழ்வில் வீடுகையளிக்கப்பட்டது. இந்த வீட்டை அமைப்பதற்காக புலம்பெயர் தேசத்தவரான சின்னத்துரை செந்தில்வேல் மற்றும் வன்னி அறக்கட்டளையினரால் கடந்த வருட இறுதியில் 18 லட்சம் ரூபாய் நிதி படையினரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. 513 வது படைப்பிரிவின் ஆளணி வளத்தைப் பயன்படுத்தி வீடு கட்டப்பட்டது.

வீடு கையளிப்பு நிகழ்வில் யாழ். மாவட்டக் கட்டளை தளபதியினால் பரிசு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது.

மாவட்டக்கட்டளைதளபதி மேஜர் ஜெனரல் டி.எஸ்.பி. என். போதொட்ட, 51ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதி வெலகெதர, 513 படைப்பிரிவின் கட்டளைத் தளபதி றசீக், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் யசோதா கிராம அலுவலர் மானிப்பாய் பொலிஸ்நிலையஉபபொலிஸ் பரசோதகர்பயனாளிகள்எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்

## அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிரான மனு நிராகரிப்பு

அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன் தாக்கல் செய்திருந்த தனிநபர் மனுவை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் வியாழக்கிழமை நிராகரித்தது.

அஜித் நிவாட் கப்ரால் மத்தியவங்கிஆளுநராகக்கடமை யாற்றியபோது, அரசநிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் எனக்குற்றஞ்சாட்டி, இந்தமனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பிரதிவாதிக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைப்பதற்காக போதுமான காரணங்களை முறைப்பாட்டாளர்முன்வைக்கத்தவறியுள்ளார் என்று கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ன கெகுனவெல தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலானகாலப்பகுதிக்குள் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநராகக் கடமையாற்றிய போது, சர்வதேச திறைசேரி முறிகளுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியமை, இலங்கையின் பிம்பத்தை உயர்த்துவதாகத் தெரிவித்து அமெரிக்கபுலனாய்வாளரான இமாட் சுபேரி என்பவருக்கு அமைச்சரவை அனுமதி இன்றி பணம் செலுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில்முன்னாள்ஆளுநர் கீர்த்திதென்னக்கோன் இந்தத் தனிநபர் மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (02)

## ஆட்சியில் இணையும் எண்ணம் ஏதுமில்லை

இந்தஆட்சியுடன்இணையும்எதிர்பார்ப்பு இதுவரையில் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர்.ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சிஅலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலலும் தெரிவித்ததாவது:

ஆட்சியில் இணைவது பற்றி என்னிடத்தில் பலர் கேள்விகளைத் தொடுத்துள்ளீர்கள். அதுபற்றியஎதிர்பார்ப்பு இதுவரையில் இல்லை. என்னைப்பொறுத்தவரையில் ஒருவிடயத்தில் நான் தெளிவாக உள்ளேன். அதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் கொள்கை தொடர்பான பிரச்சினைகள் எவையும் இல்லை. வெறுமனே ரணில் விக்கிரமசிங்கவின் தவறான தீர்மானங்கள் தான் பிரச்சினையாக உள்ளன. ஆகவே அவற்றைச் சீர் செய்வது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது - என்றார்.

### இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடனுதவி கைகொடுக்கும் என்று கடந்த வாரம் முழுவ-தும் பெரும் ஆரவாரங்கள் நடந்தாலும். இப்போதுதான் மெல்ல மெல்ல அந்த ஒப்பந்தத்தின் பாதகத் தன்மைகள் வெளிவருகின்றன.

நாணய நிதியத்தின் ஒப்பந்த நிபந்தனைகளில் ஒன்றாக அரசு உள்நாட்டுக் கடன்களில் 13 ட்ரில்லியன் ரூபாயைத் திருப்பிச் செலுத்த முடியாது என்று அறிவித்து விடும்படி கூறியிருப்பதாக கலாநிதி நாலக்க கொடகேவா தெரிவித்திருக்கிறார். அப்படி நடந்தால்உள்நாட்டுவங்கிகள் பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். அதுமட்டுமல்ல ஊழியர் சேம லாப நிதியம் போன்றனவும் பெரும் அடிவாங்கும் என்று எச்சரிக்கின்றார்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டஉடனேயேவங்கிகள் நொடிந்துவிடும் என்கிற அச்சம் மக்கள் மத்தியில் பரவி இருந்தது. ஒருவேளை வங்கிகள் திவாலாகிவிட்டால் என்னசெய்வதுஎன்கிறஅச்சம் மக்கள் மத்தியில் இருந் தது. வங்கிகளில் உள்ள தமது பணத்தை எடுத்து வைத்துக்கொள்ளலாமா என்று அப்போதே மக்கள் அச்சப்பட்டுக்கொண்டி ருந்தார்கள். பலர் எடுக்கவும் செய்தார்கள். இப்போது கொடகேவாவின் எச்சரிக்கையைத் தொடர்ந்து வங்கிகள் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்கும் நிலை ஏற்படக்கூடும்.

வங்கிகளில் பணத்தை வைத்திருந்தால் அரசு பின்கதவால் கொள்ளையடித்துக்கொண்டு போய்விடும் என்கிற அச்சத்தால் பணத்தை எடுத்து வீட்டில் வைத்தால் கள்ளன் பின்கதவால் கொண்டு சென்றுவிடுகின்ற சோகமும் ஆங்காங்கே நிகழ்த்தான் செய்கின்றன.

வெயங்கொட பொலிஸ் நிலையத்திற்கு ஏப்ரல் 4 வந்த பெண் ஒருவர் தனது படுக்கையில் தலையணைக்குக்கீழே வைக்கப்பட்டிருந்த 15 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள் என்று முறைப்பாடு பதிவு செய்திருந்தார். வெயங்கொடவில் உள்ள சுகாதார அமைச்சில் அவர் பணியாற்றி வந்தார்.

தனது காணி ஒன்றை விற்றதன் மூலம் கிடைத்த பணம் அது. அதனை அவர் வங்கியில்தான் வைப்புச் செய்து வைத்திருந்தார். நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரநெருக்கடியில்வங்கிகள் முறிந்துபோகும்என்றுஅஞ்சிய அவர் அந்தப் பணத்தை மீளப்பெற்றுதலையணைக்கு அடியில் பத்திரமாக வைத்துக்கொண்டார்.

தலையணைக்குஅடியில் பணம் இருந்த விடயம் தனது கணவனுக்குக்கூடத் தெரியாது என்று பொலிஸ் முறைப்பாட்டில் அந்தப் பெண் தெரிவித்திருக்கின்றார். சம்பவ தினம் தான் படுக்கைக்குப் போகும்போது தனது தலையணை திருப்பப்பட்டிருப்பதைப் பார்த்து அதிர்ந்துபோய் தலையணையைஎடுத்துச்சோதித்தால் பணம் மாயமாக மறைந்திருந்தது என்று தெரிவித்திருக்கிறார்.

இப்போதுதிருட்டுப்போன அவரது பணத்தை பொலிஸ் தேடிவருகின்றது. ஆட்சியாளர்கள் திருடப்போகும் பணத்தை யார் தேடுவார்கள்?

- இடிமின்னல் -

### ஊழல் எதிர்ப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் அரச மற்றும் தனியார் பிரிவுகள், அரசியல் வாதிகள், அரச அதிகாரிகள் ஊடாக இடம்பெறும் ஊழல், மோசடிகளைத் தடுக்கும் நோக்கில் இந்தச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் பரிந்துரைகளில் ஒன்றாகஊழலைத்தடுத்தலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, சர்வதேச நாணயநிதியத்தால்முன்வைக்கப்பட்ட சில தொழில்நுட்ப ரீதியிலான விடயங்களும் புதிய ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஏற்பாடுகள், சர்வதேசரீதி (03ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர்
Kalaikkathir

## ஊழல் எதிர்ப்பு ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி) யில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிகள், நியமங்கள் ஆகிய வற்றை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலமே வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்பு சட்ட மூலத்தில்விசேடமாக'இலஞ்சம் அல்லது ஊழலுக்கு எதிரான விடயங்களை புல னாய்வு செய்வதற்கான ஆணைக் குழு'என்ற பெயரிலான சுயாதீன ஆணைக்குழு ஒன்றை உருவாக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களைகொண்டதாக ஆணைக்குழுவின் அமைப்பு காணப்படும். ஆணையாளர்கள் சட்டம் - மருத்துவ கணக்காய்வுசட்டம் - மருத்து வக்கணக்கியல், பொருளியல், சர்வதேச தொடர்புகளும் இராஜதந்திர சேவைகள், பகிரங்க அலுவலக முகாமைத்துவம் அல்லது பொது முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஆகக்குறைந்தது 20ஆண்டுகாலசேவைகளை கொண்டிருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவானது 158 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றத்திற்குப்பொறுப்புகூற வேண்டியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 159ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஒவ்வொருஆண்டும்ஆணைக் குழுவின் செயலாற்றுகை தொடர்பான அறிக்கை நாடாளுமன்றத்திற்குசமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆணைக்குழுவின் பொறுப்புக்களாக விதிகளை அழுத்திக் கூறுதல், வலியுறுத்தல் ஊடாக ஊழலை தடுத்தல் தொடர்பான கல்வி அல்லது பயிற்சியை உரிய தரப்பினருக்கு வழங்கல், ஊழல், அதற்கான காரணங்களும் அதன் பாரதூரத்தன்மை மற்றும் அதனால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்கள் என்பன தொடர் பாக பொது மக்கள் மத்தி யில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், ஊழலைத் தடுத்தல், ஊழலுக்கு எதிரான போராட்டத்திலும் ஈடுபடல். ஆணைக்குழுவானது குடியியற் சமூகத்தினதும், அரச சார்பற்ற மற்றும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்களினதும் முனைப்பானபங்குப்பற்றலை ஊக்குவித்தல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளில் உள்ள ஆதனம் மற்றும் வைப்பிலிடப்பட்டுள்ள நிதி ஆகியவற்றைகுற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள சந்தேகநபர் கையாள்வதை தடை செய்யும் வகையில் கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறு மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யும் அதிகாரம் இலஞ்சம், ஊழலுக்கு எதிரான விடயங்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்ட மூல வரைபில் ஜனாதிபதி, மாகாண முதலமைச்சர்கள், ஆளுநர்கள், தூதுவர்கள், உயர்ஆணையர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரச சேவையில் உயர் அதிகாரிகள் தங்களின் சொத்து விவரங்களை வருடாந்தம் உரிய தரப்பினருக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சஜித் அணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுடன்இணையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களில்பெரும்பாலானோர் எம்முடன் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்கள் எப்போது அரசுடன் இணைவார்கள் என்று தெரியாது.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருக்கும் நாடாளுமன்றஉறுப்பினர்கள் அனைவரும்ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள்உறுப்பினர்களாவர். எனவே, தற்போது எதிர்க் கட்சியில் இருக்கும் குறித்த உறுப்பினர்களை வலைவீசி எடுக்கும்தேவைரணிலுக்குக் கிடையாது. அவர்கள் தாமாகவே ரணிலுடன் இணைவார்கள்.

எனினும், தற்போதைய நிலைமையில்கட்சிஅரசியலை நான் பேச விரும்பவில்லை. அதற்கான நேரம் இதுவல்ல. மக்கள் நலன் என்ற ரீதியில் - அரசு என்ற ரீதியில் நாம் அனைவரும் ஓரணியில் செயற்பட வேண்டும். அப்போதுதான் நாடு மீளெழுச்சி பெறும் - என்றார். (02)

## பயங்கரவாத ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன்னதாக, நீதி அமைச்சில் தன்னைச் சந்தித்துப் பேசிய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில்முன்வைப்பதை, பல்வேறு தரப்பினரது கோரிக்கைகளையும் அடுத்து ஒத்திவைத்திருப்பதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். அது பற்றிய செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர்,

பல்வேறு தரப்பினரது கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு பயங்கரவாத எதிர்ப்புசட்டமூலத்தைஅடுத்த வாரம் சமர்ப்பிப்பதற்குப் போட்டிருந்த திட்டத்தைச் சற்றுப் பிற்போட்டுள்ளேன். எனினும்மேமாத இறுதிக்குள் அதனைநிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஏப் ரல் 25 அது குறித்துக் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வாழ்வையும், சொத்தையும் பாதுகாப்பதுஆட்சியின்பொறுப்பாகும். ஐக்கிய நாடுகளின் அடிப்படைய விடயமாக இது அமைந்துள்ளது. இதனை ஆட்சிகள் நிறைவேற்றத் தவறினால் நாட்டிற்கு ஆட்சி என்றொன்று தேவைப்படாது.

அதேபோன்று மக்களின் அடிப்படைய உரிமைகளை பாதுகாப்பதற்கான முக்கிய பொறுப்பும் ஆட்சியாளர்களுக்கு உள்ளது. இந்த இரண்டுவிடயங்களையும்சம நிலைப்படுத்தியேசட்டமூலத்தினை உருவாக்கவேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனநாயகத்தின் மீது விடுக்கப்படும் சாவுத் தாக்குதல் என்று விமர்சிக்கின்றார்கள். அவ்வாறு விமர்சிப்பவர்கள் சட்டமூலத் தில் எங்கே அதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் காண்பிக்கவேண்டும். அவ்வாறில்லாது விட்டால் நீதிமன்றத்திற்குச் சென்று அதனை நீக்க வேண்டும். தற்போது நீதிமன்றத்துக்குச் செல்வதற்கான காலமும் அதிகரிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## திரும்பப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுமக்களின் எதிர்ப்பைக் கருத்தில்கொண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தைதிரும்பப்பெறமுடிவு எடுக்கப்பட்டாலும், ஆட்சியாளர்களின் குறித்த அந்த முடிவில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு முன்னரும் மக்களால் எதிர்க்கப்பட்ட சட்டமூலங்களை ஆட்சியாளர்கள் திரும்பப் பெறுவதாக அறிவித்திருந்தாலும்பின்னர் தமது பெரும்பான்மையைப் பயன்படுத்தி நிறைவேற்றியுள்ளனர். எனவே, இந்தப் பயங் கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைத் திரும்பப் பெறு வதாக இருந்தால், அது தொடர்பில் தெளிவான எழுத்துமூல அறிவிப்பை வெளியிடவேண்டும்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் கூட மீறப்படுகின்றன - என்றுள்ளது. (02)

## 3 பொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்த விலைச் சலுகை யைப் பெற்றுக்கொள்ள முடி யும்.

இதன்படி, டின்மீன் (425 கிராம்) புதிய விலை 490 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் புதிய விலை 97 ரூபாவாகும்.

ஒரு கிலோ கோதுமை மாவின் புதிய விலை 225 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக 500 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மளிகைப் பொருட்களுக்குவிதிவிலக்கான விலைக் குறைப்பு மற்றும் தள்ளுபடி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று லங்கா சதொச மக்களுக்குத் தெரிவித்துள்ளது. (02)

## குடாநாட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உற்பத்தியாளர் சங்கம் அதிரடியாக பாணின் விலையைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் கோதுமை மா, நல்லெண்ணெய் மற்றும் முட்டையின் விலைகள் குறையும் பட்சத்தில், பேக்கரி பொருட்களின் விலைகளைக் குறைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்திருந்தது. எனினும் யாழ். மாவட்டக் கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் பாண் விலைக்குறைப்பு அறிவிப்பை விடுத்துள்ளது.

## நிரம்பி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காணப்படாத நிலையில் வைத்தியசாலையின் அமரர் அறையில் வைக்கப்பட்டுள்ள சடலங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினாலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமரர் அறையில் 36 சடலங்களையே வைக்க முடியும் என்பதனால் அடையாளம் காணப்படாத சடலங்களைக் கொண்டு வர வேண்டாம்எனநுகேகொடை மற்றும் கல்கிசை பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் களுபோவில போதனா வைத்தியசாலை தெரிவித்துள்ளது. (02)

## ராஜபக்ஷக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில்பொதுஜன பெரமுனவின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் வியாழக்கிழமை கருத்துத் தெரிவித்தனர்.

மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிக்கையில், மஹிந்த ராஜபக் வை மட்டுமல்ல கோட்டாபய ராஜபக் வையும் வீழ்த்துவதற்கு சதிகள் முன்னெடுக்கப்பட்டன. குறித்த சதி கட்சிக்குள்ளேயும் நடந்துள்ளது, வெளியிலும் நடைபெற்றுள்ளன. அவை தொடர்பில் உரிய தருணத்தில் நாம் வெளிப்படுத்துவோம் - என்றார்.

ஜோன்சன்பெர்னாண்டோ கூறுகையில், மூன்றாம் தரப்புச் சதி தொடர்பில் எதிர்காலத்தில் பேசுவோம். குறித்த சதி தொடர்பில் எமக்கு பல விடயங்கள் தெரியும். ஆனால் அவற்றைக் கதைப்பதற்கு உரிய தருணம் வரும். அப்போது அதுபற்றிக் கூறுவோம் - என்றார்.

எஸ்.எம்.சந்திரசேன தெரிவிக்கையில், பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக் வையும், அமைச்சர்களாக பலரையும், என்னையும் சேர்த்து, கோட்டாபய ராஜபக் தான் பதவி நீங்குமாறு கோரினார். அதற்கு அமையவே நாம் பதவிகளைத் துறந்தோம். பின்னர் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். கட்சியின் மூத்த உறுப்பினர்களான எமக்கு மீண்டும் அமைச்சுப்பதவிகள்கூடத் தரப்படவில்லை. இறுதியாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையே தற்போதுமுள்ளது. இந்தச் செயற்பாடுகள் வழி நடத்தப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது - என்றார்.

## ராஜபக்ஷக்களை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேர்காணலின் போது மூன்றாவது சக்தியொன்றே ராஜபக்ஷக்களின்வீழ்ச்சியின் பின்னணியில் இருந்ததாகத் தெரிவித்துள்ளமைதொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மே மாதம் ஒன்பதாம் திகதி சம்பவத்தின் பின்னர் ஒட்டுமொத்த அமைச்சரவையும் நீக்கப்பட்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். அப்போது புதிய பிரதமராக இருந்த அவர் போராட்டம் இடம்பெறவேண்டும் என்றே கூறினார். கோட்டா கோ ஹோம்என்றகோசத்துடனான கோட்டா வீட்டுக்குப் போ கிராமம்தொடர்ந்தும்செயற்படட்டும் என்றும் கூறினார்.

பிரதமர் ரணில், தன்னை பிரதமராக நியமித்த , கோட்டாபயவுக்கு எதிராகவே அந்தக் கருத்தினை கூறினார். இதன்மூலம் ரணில் விக்கிரமசிங்கவிடம் பெரும் திட்டமொன்று இருந்துள்ளமை தெளிவாகின்றது.

போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு இறுதியில் ஜனாதிபதியும் துரத்தியடிக்கப்படுவார் என்பதே பிரதமராக இருந்த ரணிலின் திட்டமாகும். ஈற்றில் அதுவே நிகழ்ந்தது. ஆகவே மூன்றாவதுசக்திஅவராகக்கூட இருக்கலாம் - என்றார்.

## நாணய நிதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நீடிக்கப்பட்ட கடன்வசதியை வழங்கியுள்ளது. அதுவழங்கப்படுவதற்காகசர்வதேசநாணய நிதியம் முன்வைத்துள்ள நிபந்தனைகள் மிகவும் பாரதூரமானவை.

நான் குறித்த நிபந்தனைகள் அடங்கிய ஆவணத்தின்151பக்கங்களையும்வாசித்துள்ளேன். அதனடிப்படையில் தான் இந்த விடயத்தினைக் கூறுகின்றேன்.

அதேநேரம், சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகளை இலகுவில் நிறைவேற்ற முடியாது. அவ்வளவு தூரம் அவை இறுக்கமானவையகவுள்ளன. அத்துடன் அந்த நிபந்தனைகள் இலகுவில் மாற்றியமைக்கவும் முடியாதவையாகவே உள்ளன.

நீங்கள் இதற்கு பின்னர் என்னிடத்திலோ, இல்லை இலங்கையின் தலைவரான ஜனாதிபதியிடத்திலோ பிரச்சினைகளை கேள்விகளாக தொடுக்க முடியாது. நீங்கள் வொஷிங்டனில் தான் அனைத்தையும் கேட்டவேண்டும். எனென்றால் முழுமையான கட்டுப்பாடும் வொஷிங்டனிடத்தில்தான் இருக்கப்போகின்றது.

நான் ஒன்பது ஆண்டுகளாக மத்திய வங்கி ஆளுநர் பதவியில் இருந்துள்ளேன். அந்தக்காலத்தில்தான் போர் நடந்தது. போரையும் நடத்திக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தினையும் சமச்சீராக முன்னகர்த்தியே சென்றோம். நாம் நாடு பதாளத்திற்கு செல்கின்றது என்று அச்சுறுத்தவில்லை. பணிகளைச் செய்ய முடியாது என்று அழவில்லை. நாட்டின் தலைவரும், மத்தியவங்கியின் தலைவரும் பொதுமக்களின் முன்னாள் அழுவதை நிறுத்த வேண்டும்.

நான்இப்போதுபொதுஜன பெரமுனவின் அங்கத்துவத்தினைக் கொண்டிருக்கவில்லை. நான் சுயாதீனமாக உள்ளேன். அதனை நாட்டு மக்களுக்கு தெளிவாகக் கூறிக்கொள்கின்றேன் - என்றார்.

## விடைத்தாள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போக்குவரத்து கொடுப்பனவாக 2 ஆயிரத்தி 900 ரூபா செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி பொதுத் தராதர உயர்தரபரீட்சைவிடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும்மதிப்பீட்டாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக செலுத்துவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

அமைச்சரவையினால் எடுக்கப்பட்டுள்ள கொள்கையளவிலான தீர்மானத்தின் பிரகாரம் திறைசேரி மற்றும் தேசிய சம்பள ஆணைக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு அமைய இந்தகொடுப்பனவை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, தங்களது வீடு அல்லது வழக்கமான பணியிடத்தில் இருந்து பரீட்சை விடைத்தாள்மதிப்பீட்டுமத்திய நிலையத்துக்குநாள்தோறும் 80 கிலோ மீட்டருக்கு அதிக தூரம் பயணிக்கும் மதிப்பீட்டாளர்களுக்கு மற்றும் மதிப்பீட்டு மத்திய நிலையத்துக்கு அருகில் தங்கும் வசதி இல்லாதமதிப்பீட்டாளர்களுக்கு நாள்தோறும் 2ஆயிரத்தி 900ரூபா கொடுப்பனவு செலுத்துவதற்கும்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதன் பிரகாரம் 2022 (2023) கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டாளர்களை இணைத்துக்கொள்ளும்நிகழ்நிலைவழி ஊடாக விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும்காலம்இந்த மாதம் 18ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது - என்றார்.

## எல்லைக் கிராமமான .........



(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெற்றுக்கொண்ட காணி உரிமையாளர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர்.

மத்திய வகுப்பு காணித் திட்டத்தின் கீழ் 1000 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்திலிருந்துவந்து முல்லைத்தீவில் பணியாற்றிய அரச அலுவலர்களுக்கே பெரும்பாலும் இந்தக் காணிகள் வழங்கப்பட்டிருந்தன.

அவ்வாறுமணற்கேணிப் பகுதியில் காணிகள் பெற்றுக் கொண்டவர்களில் பெரும்பாலானர்கள் தற்போதும் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, அச்சுவேலி, கொழும்பு எனபல இடங்களிலும்வசிக்கின்றனர். எனினும் அவர்களை இனங்கண்டு தொடர்புகளை ஏற்படுத்துவதில் பெரும் சிக்கல்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு காணி உள்ளவர்களில் ஐவர் மாத்திரமே எமது காணிகளுக்கு உரிமை கோரி வந்திருக்கின்றோம். எனவே மணற்கேணியில் காணிகள் உள்ளவர்கள் எம்மோடு இணைந்துகொள்ளுங்கள், நாம்அனைவரும்இணைந்து எமது எல்லைக்கிராமத்தினை மீட்டெடுக்கலாம்.

மணற்கேணிப்பகுதியில் காணிகளைப் பெற்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களில் பலர் தற்போது இறந்திருக்கலாம். எனினும் அவர்களுடைய, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இருப்பார்கள்.

அவ்வாறு காணி உரிமையாளர்கள் இருப்பின், அவர்கள் எம்மோடு தொடர்புகொள்ளமுடியும். 779229098 என்னும் இந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இந்த மணற்கேணி காணி தொடர்பிலே பேசமுடியும்.

45 வருடகாலத்திற்குப் பின்னர் நாம் எமது வளமான எல்லைக்கிராமத்தினை மீட்டெடுப்போம். அதற்காக நாம் அனைவரும் ஒன்று சேருவோம் - என்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பாவ வினையின் விளைவுகள்

இன்று உலக சுகாதார நாள். தொடக்க சுகாதார சேவையை வலுப்படுத்துவோம் என்பது இந்த ஆண்டுக்கான மகுட வாக்கியம். ஆனால் இலங்கை அதிலிருந்து வெகு தூரத்தில் உள்ளது. தொடக்க சுகாதாரம் மட்டுமல்ல சிறுவர்களுக்கான சிகிச்சைகளையே அவர்கள் இழக்கும் நிலையை நாடு எட்டியுள்ளது. அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சிறுவர் பிரிவில் பணியாற்றி வந்த 4 மருத்துவர்களும் அங்கிருந்து வெளியேறி வெளிநாடு சென்றுவிட்டதால் அந்தப் பிரிவையே மூடிவிட்டதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

அதுபோன்ற நிலை யாழ்ப்பாணத்திலும் வரலாம் என்று எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். மாவட்டப் பிரதிநிதியான மயூரன். இது சுகாதாரத்துறை மட்டுமே எதிர்கொள்ளும் பிரச்சினை இல்லை. நாட்டிலுள்ள அனைத்துத் துறைகளிலுமே இன்று மூளைசாலிகளின் வெளியேற்றம் விரைவாகியிருக்கின்றது. படித்தவர்கள் உயர் பதவிகளில் இருப்பவர்கள் தொடர்ந்து வெளியேறி வருகின்றார்கள்.

ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வரிக் கொள்கை மட்டுமே இதற்குக் காரணமல்ல. நாட்டில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற நிலைமையே மருத்துவத்துறையினர் பலரும் வெளியேறுவதற்கான காரணம் என்று சுட்டிக்காட்டுகின்றார் மருத்துவர் மயூரன். பொருளாதார நெருக்கடி ஏற்படுத்திய மிக மோசமான விளைவுகளில் ஒன்று இது. இனி இந்த நாட்டில் வாழ்வது பாதுகாப்பானது அல்ல என்று பலரும் உணரத் தலைப்படுகிறார்கள். அதனால் மேற்கு நாடுகளுக்குச் சென்றுவிடலாம் என்பது பலரதும் எண்ணமாக இருக்கின்றது. குறைந்தது இந்தியாவுக்காவது ஓடிவிடலாம் என்று நினைக்கிறார்கள்.

75 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்டு சீரழித்த அரசியல்வாதிகளினால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. சுயநலன்மிக்க, நாடு பற்றியோ மக்கள் பற்றியோ அக்கறையற்ற அரசீயல்வாதிகளின் செயற்பாடுகள் காரணமாகவே இலங்கை இன்று தோல்வியடைந்த நாடாக நின்றுகொண்டிருக்கின்றது. இந்த நிலையிலிருந்து மீண்டுவர எல்லோரிடமும் கையேந்திக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் இன்றும் அரசியல்வாதிகளின் சலுகைகளுக்கும் சொகுசுகளுக்கும் எந்தக் குறையும் இல்லை.

அவர்களின் செயற்பாடுகளின் விளைவுகள் நாட்டின் நாளைய எதிர்காலமான சிறுவர்களின் மீது சுமையாக மாறியிருப்பது பெரும் சோகம். அரசியல்வாதிகளின் பாவ வினைகள் அந்த அப்பாவிச் சிறுவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. அனுராதபுரம் போன்றதொரு நிலை நாளை நாட்டின் மற்றைய பகுதிகளிலும் ஏற்படாது என்பதற்கு எந்த நிச்சயமும் இல்லை. விரைவில் இந்த நிலையை மாற்றாவிட்டால் ஒட்டுமொத்த எதிர்காலமும் பாதிக்கப்படும்.

ஆட்சியில் உள்ளவர்கள் தமது அதிகார வெறியிலிருந்துவெளிவந்துமக்களுக்குஎதுநன்மையோ அதனைச் செய்வதற்கு முன்வராத வரையில் நாடு மேலும் மேலும் மோசமான பாதிப்புக்களையே சந்திக்கப் போகின்றது.

# சிறு கடற்றொழிலாளர்களை பாதுகாக்க ஒத்துழைக்குக!

## சர்வதேச அமைப்புக்களுக்கு டக்ளஸ் அழைப்பு



சிறு கடற்றொழிலாளர்களைப்பாதுகாத்து அவர்களின் வாழ்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு தன்னால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சர்வதேச அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் சிறு கடற்றொழிலாளர்களை பாதுகாப்பது தொடர்பான ஆய்வுஅறிக்கையின்அறிமுக நிகழ்வில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சரால் மேற்குறித்த அழைப்பு விடுக்கப்பட்டது.

தேசியமீனவர்ஒற்றுமை அமைப்பு, உலகளாவிய மூலோபாய வரைபிற்கான ஆலோசனைக் குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புக்களின்முயற்சியால் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையின்அறிமுகநிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காணொளி ஊடாக கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தொடர்ந்து உரையாற்றுகையில் -

இலங்கையில் சுமார் 2 லட்சம் சிறு கடற்றொழிலாளர்கள் இருக்கின்ற நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் கடற்றொழில் அமைச்சு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

மேலும், இந்தியக் கடற்றொழிலாளர்கள் அத்துமீறி இலங்கை கடற் பரப்பினுள் நுழைந்து சட்ட விரோத தொழிலான இழுவைமடி வலைதொழிலைமேற்கொள்வதால் இலங்கையின் சிறு தொழிலாளர்கள்பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர் என வருத்தம்வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இந்தியக்கடற்றொழிலாளர் விவகாரத்தை சுமுகமாகத் தீர்ப்பதற்கு இராஜதந்திர ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும், தன்னுடைய முயற்சிகளுக்கு சர்வதேச அமைப்புக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசின் ஜனநாயகவிரோத செயற்பாட்டை மக்களின் ஆதரவுடன் தோற்கடிப்போம்



## ஐயந்த சமரவீர சூளுரை

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டத்தின் பாரதூரத்தன்மையை நாட்டு மக்களுக்குஎடுத்துரைப்போம். சட்டம் நிறைவேற்றப்பட்டால் போராட்டத்தில்ஈடுபடுபவர்கள் அனைவரும் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்படுவார்கள்.

ஜனநாயகம்மலினப்படுத்தப்படும் என எதிர் தரப்பின் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார். பொரள்ளை பகுதியில் உள்ள என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புதடைச்சட்டமூலத்தை எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்க நீதியமைச்சர் எதிர்பார்த்திருந்தார்.

இந்த சட்டமூலத்துக்கு எதிராககடுமையாகஎதிர்ப்புகள் எழுந்ததை தொடர்ந்து சகல தரப்பினருடன்பேச்சில்ஈடுபட நீதியமைச்சர் தீர்மானித்து சட்டமூலத்தை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக் கும் தீர்மானத்தை தாமதப்படுத்தியுள்ளார்.

சர்வதேசநாணயநிதியத்தின்ஒத்துழைப்புகிடைத்ததால் பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம் என மக்கள் மகிழ்ச்சி கொள்ள முடியாது.

கடுமையான நிபந்தனைகளை சட்டமாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்தும் போது மக்கள் வீதிக்கு இறங்கி போராடுவார்கள், தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவார்கள். மக்கள் எதிர்ப்பை முடக்குவதற்காகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை இயற்ற அரசாங்கம் துரிதமாக செயற்படுகிறது.

சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின் நிச்சயம் உயர்நீதிமன்றத்தை நாடுவோம். இந்த சட்டமூலத்தின் பாரதூரத்தன்மையை நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்போம். மக்களின் ஆதர வுடன் அரசாங்கத்தின் ஜனநாயகத்துக்கு எதி ரான செயற்பாட்டைத் தோற்கடிப்போம். - என்றார்.

# சஜித்தைப் பழிவாங்குவதாக நினைத்து தமிழ் மக்களை அரசு பழிவாங்குகிறது



## சாணக்கியன் காட்டம்

சஜித் பிரேமதாஸவை பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு உண்மையிலேயே வடக்கு கிழக்கிலே வாழும் மக்களையேஇந்தஅரசாங்கம் பழிவாங்குகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் கேள்விநேரத்தின்போதேஅவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உரையாற்றிய அவர் -

உண்மையிலேயேஇந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்ல எங்களுடைய வடக்குக் கிழக்கிலே இருக்கும் அனைத்துமாவட்டங்களிலுமே நல்லாட்சி காலப்பகுதியிலே அந்த நேரத்திலே வீடமைப்பு அதிகார சபைக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் சஜித் பிரேமதாஸ பல வீடு திட்டங்களைஇந்தவடக்குக்கிழக்கிலே வந்து ஆரம்பித்திருந்தார்.

உண்மையிலேயே இந்த நல்லாட்சி அரசாங்கம் மாறிவிட்டதுக்கு பிறகு நல்லாட்சி அரசாங்கத்தின் கீழே சஜித்பிரேமதாஸவின்அமைச்சின் கீழே வழங்கப்பட்ட வீடுகள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக இந்த வீட்டுத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸவை பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு இந்த வீட்டுத் திட்டங்களை முடிக்காமல் இருப்பதன் ஊடாக உண்மையிலேயே வடக்கு கிழக்கிலே வாழும் மக்களைத் தான் நீங்கள் பழிவாங்குகின்றீர்கள்.

ஏனென்றால்உங்களுக்கு தெரியும் 2020 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் எத்தனையோ அமைச்சர்களிடம் இந்த கேள்விகளை நாங்கள் கேட்கும்போது கூட ஒவ்வொரு அமைச்சரும் இதை நாங்கள் முடித்துத் தருவோம் நிதி கிடைத்தால் முடித்துத்தருவோம் என கூறினார்கள்.

நிதியைபெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. வீடமைப்பு அதிகார சபைக்குரிய நிதி கிடைக்கும் பட்சத்தில் ஆறு மாதத்திற்குள் நாங்கள் முடிப்போம் என்று சொல்வதானது நாங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாதஒருபதில்.

இந்த வீடுகள் லிண்டர் மட்டத்திற்கு கட்டினால் 5 லட்சம் ரூபா, கூரை போட்டால் 10 லட்சம் ரூபா என கூறியமை காரணமாக பல மக்கள் இன்று கடனாளியாக மாறி இருக்கிறார்கள்.

இந்த வீடு தொடர்பான விடயங்களைசார்ந்தகௌரவ அமைச்சரிடம் முன்வைக்கும் ஒரு வேண்டுகோள் நீங்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வரும் போது தயவு செய்து நீங்கள் மட்டக்களப்பில் இருக்கும் ஆளும் கட்சியை சேர்ந்த சிவநேசதுரை சந்திரகாந்தன், வியாழேந்திரன் ஆகியோரை மட்டும் நீங்கள் கூப்பிட்டு பேசாமல், நீங்கள் எதிர்க்கட்சியிலே இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து பேச வேண்டும்.- எனத் தெரிவித்துள்ளார்.

# பொலன்னறுவையில் போலந்து பெண் பாலியல் துஷ்பிரயோகம்; முதியவர் கைது!

பொலன்னறுவையில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பார்வையிடச் சென்ற வெளிநாட்டு சுற்றுலாப் பெண் பயணி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இடம் பெற்று சில மணித்தியாலங்களின் பின்னர் அதே தொல் பொருள் பிரதேசத்தி லேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலன்னறுவை சுற்றுலா பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் சுற்றுலாப் பயணிகளுக்கு பொருள்களை விற்பனை செய்பவர் என விசாரணையில் தெரிய வந் துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். பொலன்னறுவை ஹத்தமுனாபாறை பிரதேசத்தில் வசிக்கும் 72 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

போலந்து பிரஜையான 43 வயதுடைய இந்தப்பெண், பொலன்னறுவை பூஜை செய்யும் அறை ஒன்றில் வைத்துபாலியல்துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார் எனப் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.


hp World
intel.
சித்திரை
புத்தாண்டுத்
தள்ளுபடி
New Year Offer
අවුරුදු වාසි
NALIN Information Technologies Pvt Ltd.
11GEN
12GEN
it's Free
BAGS, PEN DRIVE, EAR PHONE, MOUSE, MOUSE PAD
intel. CORE i3
HP LAPTOP 15S-DU3786TU
Intel® Core™ i3 11 Gen Processor
4GB RAM | 1TB HDD | Windows 11
SPECIAL PRICE : Rs.177,750/- Upwars
HP LAPTOP 15S-FQ5786TU
Intel® Core™ i3 12 Gen Processor
8GB RAM | 512GB SSD | Windows 11
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD
Kilinochchi Tel : 021 228 5550 / 076 359 7610 | Hp world Tel : 021-2224994 / 0763594363
Jaffna Tel : 0763594359 / 0212210404 | Thirunelvely Tel : 021 222 1121 / 077 766 7975
Mannar Tel : 023 222 2500 / 076 359 4368


ஆறு மாத DSL உத்தரவாதத்துடன்
Palma மின்கலங்கள்
dsl We lead the way...!
IT Power Backupக்காக
PALMA
7Ah | 9 Ah | 20 Ah | 26 Ah | 42 Ah
65 Ah | 100 Ah | 150Ah | 200 Ah
ரூ.5,814 இருந்து
மின்சார தராசுகள் & பொம்மைகளுக்காக
6Ah | 12 Ah
ரூ.2,223 இருந்து
மின் மோட்டார் சைக்கிள்களுக்கான
12Ah | 20 Ah | 24 Ah | 28 Ah | 45 Ah
ரூ.13,252 இருந்து
Douglas & sons (pvt) ltd நான்கு தசாப்தங்களாக இலங்கை வாடிக்கையாளர்களின் வாகன மற்றும் பிற தேவைகளுக்காக சர்வதேச தரத்திலான பேட்டரிகளை இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.
077 307 8799
070 163 0209

காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் வாழ்க்கையை சீர்குலைக்க எவரையும் அனுமதிக்கவே முடியாது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திட்டவட்டம்

தேசிய அபிவிருத்திக்காக நாட்டு மக்கள் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துடன் செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தென்னகோன், அடக்குமுறை கொள்கையில் நம்பிக்கை இல்லை. மக்களின் வாழ்க்கையை சீர்குலைக்க அனுமதிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேருவளையில் நடைபெற்ற இஸ்லாமியர்களின் ரமழான் இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

நாட்டின் அண்மைய கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசாங்கம் முன்னெடுத்த சிறந்த பொருளாதார முயற்சியின் பலன்களை நாட்டு மக்கள் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். இந்தக் கட்டத்திலிருந்து மேலும் முன்னேறுவதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து தேசிய வளர்ச்சிக்காக ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

ஜனாதிபதியின் தலைமையின் கீழ் கடுமையான பொருளாதார நெருக் கடியிலிருந்து மீள்வதற்கும், குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதற்கான பொறுப்பு எமக்குக் காணப்படுகிறது.

அத்துடன் அடக்குமுறை கொள்கையில் எமக்கு நம்பிக்கை இல்லை. மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைக்க யாரையும் அனுமதிக்க முடியாது.

அதேவேளை மக்கள் மத்தியில் ஒற்றுமையும் அவசியமாகும். புதிய ஜனாதிபதி மற்றும் புதிய அரசாங்கத்தின் தலைமையின் கீழ் நாம் புதிய தொலைநோக்குப் பார்வையுடன் செயற்படுகிறோம்.

மேலும் மக்கள் மத்தியில் உள்ள அவநம்பிக்கை மற்றும் ஒற்றுமையின்மை முதலில் அகற்றப்பட வேண்டும். ஒரு சிறந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான நம்பிக்கையையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப வேண்டும். எனவே, அனைவரும் ஒற்றுமையுடனும், நல்லிணக்கத்துடனும் பணியாற்ற வேண்டும். - என்றார்.

# பால் தேநீரை 90 ரூபாவாவுக்கும் தேநீரை 30 ரூபாவுக்கும் வழங்காவிடின் உணவகத்தை படம்பிடித்து வட்ஸ்அப் செய்க!

சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஹோட்டல்களில் விற்கப்படும் கொத்து ரொட்டி மற்றும் பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை 20 சதவீதத்தால் குறைப்பதற்கும் பிளேன் டீயின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்கும் தீர்மானித்துள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களது சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இம்மாதம் 5 ஆம் திகதி முதல் இந்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார். இதன்படி 100 ரூபாவாகக் காணப்பட்ட பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைத்து 90 ரூபாவாகவும், 40 ரூபாவாக காணப்பட்ட பிளேன் டீயின் விலையை 10 ரூபாவால் குறைத்து 30 ரூபாவாகவும் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விலைகளில் உணவுப்பொருள்கள் மற்றும் தேநீர் வழங்கப்படாவிட்டால், அந்த உணவகத்தை படம்பிடித்து 0788 714 126 வட்ஸ் அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கும்படி பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

நித்திரையில் இருக்கும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் விழித்தெழுந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பகலில் வீடுகளுக்குள் புகுந்து பொருள்களை திருடிய முன்னாள் அரசாங்க ஊழியர் கைது

பகல் நேரத்தில் வீடுகளுக்குள் புகுந்து தங்க நகைகள், மடிக்கணினிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை திருடும் முன்னாள் அரச ஊழியர் ஒருவரை குளியாப்பிட்டிய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குளியாப்பிட்டிய எலத்தலாவ பகுதியைச் சேர்ந்த இவர், தங்க நகைகள், 4 விலை உயர்ந்த மடிக்கணினிகள் மற்றும் 4 கையடக்கத் தொலை பேசிகளைத் திருடி அவற்றை விற்பனை செய்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

மாகந்துர வைத்தியசாலையில் ஊழியராக பணிபுரிந்த வேளையில், சந்தேக நபர் இதற்கு முன்னர் திருட்டு குற்றத்துக்காக தண்டனை பெற்றுள்ளதுடன் தனது தொழிலையும் இழந்துள்ளார்.

சந்தேக நபர் தொடர்பில் குளியாபிட்டிய உள்ளிட்ட பல நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




# இந்து பாரம்பரிய இருப்புக்கு இலங்கையில் பேராபத்து

## புலம்பெயர் அமைப்புகள் இந்திய பிரதமருக்கு கடிதம்

இலங்கையில் இந்து பாரம்பரியத்தின் இருப்புக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாக புலம்பெயர் அமைப்புகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளன.

ஏழு புலம்பெயர் அமைப்புகள் இணைந்து இந்த கடிதத்தை எழுதியுள்ளன.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கை அரசாங்கம் தனது இராணுவத்தின் உதவியுடன் இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்து கலாசாரம், பாரம்பரியம், கோவில் ஆகியவற்றின் இறுதிக் கோட்டையை இலக்கு வைக்கிறது.

1948 ஆம் ஆண்டின் பின்னர் 1800 ஆலயங்களையும் பாரம்பரியங்களையும் அழித்த பின்னர் இது இடம்பெறுகின்றது.

இலங்கையின் வட பகுதியில் அதிகளவு மதிப்புக்குரியனவாகக் காணப்படும் கீரிமலை பகுதியில் காணப்பட்ட ஐந்து நூற்றாண்டு கால வரலாற்றை கொண்டுள்ள ஆதிசிவன் ஆலயம் இராணுவ ஆக்கிரமிப்பு என்ற போர்வையில் அழிக்கப்பட்டுள்ளதை ஆழ்ந்த கரிசனையுடனும் அவசரத்துடனும் நாங்கள் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின்போது இராணுவம் அந்த பகுதியை மிக நீண்டகாலம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த பின்னர் பொதுமக்களை அங்கு செல்வதற்கு அனுமதித்த வேளையே இது தெரியவந்தது.

கோவில் இருந்த பகுதியில் அதனை அழித்துவிட்டு ஜனாதிபதி மாளிகையொன்றைக் கட்டியுள்ளனர்.

இதன் மூலம் இந்துக்கள் இறந்தவர்களுக்கான இறுதி மரியாதைகளை முன்னெடுக்கும் பகுதியின் புனிதத்தை சீர்குலைத்துள்ளனர்.

2015 இல் இந்தியாவின் கௌரவ பிரதமர் நரேந்திர மோடி இந்த பகுதிக்கு அருகில் உள்ள நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு விஜயம் மேற்கொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இலங்கையில் உள்ள இந்து பாரம்பரியம், கலாசாரத்தின் இறுதிச் சின்னமாக காணப்படுகின்றவற்றை அழிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் செயற்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்தியாவும், சர்வதேச சமூகமும் பிணையெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போதிலும் இது இடம்பெறுகின்றது.

புனிதப் பொருள்களை அவமதிக்கும் இந்தச் செயல் இடம்பெற்ற சில காலத்துக்குள் கிழக்கு திருகோணமலையில் உள்ள இந்துக்களின் புனித பகுதியான கன்னியா நீரூற்றை அநுராதபுர நகரத்துடன் தொடர்புடையது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதனை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் உள்ள ஆதிசிவன் ஐயனார் கோவில் அழிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டம் வெடுக்குநாறி மலையில் உள்ள ஆலயத்தின் பல விக்கிரகங்கள் களவாடப்பட்டன.

இலங்கைக்கான சர்வதேச உதவிகளை நாங்கள் வரவேற்கும் அதேவேளை, இலங்கையில் இந்து பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றை அழிக்கும் தனது நிகழ்ச்சி நிரலுக்கு இலங்கை அரசாங்கம் இந்த உதவியை பயன்படுத்த நிதி வழங்கும் சமூகம் அனுமதிக்கக் கூடாது என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்து மத கலாசாரம் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்காக இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையை அமைக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை, இலங்கைக்கு நிதி வழங்கும் சமூகம் வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

# நிதி மோசடியில் ஈடுபட்ட போலி மருத்துவர் கைது

## பொரளையில் சம்பவம்

சிறுவர்களுக்கான லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் வைத்தியராக நடித்து மக்களை ஏமாற்றிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஒருவரை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாகக் கூறி 70 ஆயிரம் ரூபாவை ஏமாற்றியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யக்வில, பன்னல பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று (வியாழக்கிழமை) கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

# இலங்கை விரைவில் மீட்சியடைந்துவிடும்

## வினோத் கே ஜேக்கப் நம்பிக்கை



இலங்கை வெகு விரைவில் பொருளாதார மீட்சியினை எட்டும் என இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர் ஒருங்கிணைப்பு மன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது திறைசேரியின் அபிவிருத்திப் பங்காளர் ஒருங்கிணைப்பு மன்ற இம்முயற்சியைப் பாராட்டிய பிரதி உயர் ஸ்தானிகர்,

இவ்வாறான அமர்வுகளை 6 மாதங்களுக்கு ஒரு தடவை ஒழுங்கமைக்கவேண்டுமென்ற முன்மொழிவுக்கு தனது ஆதரவையும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் சர்வதேச நாணய நிதியம் குறித்த விவகாரங்களில் இலங்கை மக்களுக்காக இந்தியா உறுதியான ஆதரவை வழங்கியதாக தெரிவித்த அவர், இலங்கை வெகு விரைவில் பொருளாதார மீட்சியை எட்டும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அரங்கத்திற்கு வரும் தமிழ் அரசியல்



## அக்க ரை றை அலசல்

**என்.சத்தியமூர்த்தி**

எப்போது மலையக தமிழ் அரசியல் தலைவர் மனோ கணேசன், தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கான ஓர் அரங்கத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்று அழைப்பு விடுத்தாரோ, அப்போதே, செல்வம் அடைக்கலநாதனும், சித்தார்தனும் அதனை ஆதரிப்பார்கள் என்பது தெரிந்த விடயம்தான். ஆனால், கேள்வியே, பிரிந்து நிற்கும் தமிழ் அரசு, மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விக்னேஸ்வரன் வகையறாக்கள், அதில் பங்குபெற்று அரங்கத்தை அர்த்தமுள்ள அமைப்பாக மாற்றுவார்களா, என்பதுதான்.

மேலை நாடுகளில், இது போன்று, இலங்கை அல்லது இந்தியா ஆதரவு நாடாளுமன்ற அரங்கம் அல்லது ‘காகஸ்’ (Caucus), அமைக்கப்படும்போது, அதன் அடிப்படைக் கொள்கைகளை ஆதரிக்கும் அனைத்து உறுப்பினர்களும் அதில் அங்கம் வகிப்பார்கள். முக்கியமாக, ஆளும் கட்சி மற்றும் முக்கிய எதிர்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதில் இடம்பெற்றிருப்பார்கள்.

இதில், கட்சிப் பாகுபாடுகளுக்கு இடமில்லை. அவ்வாறு இருந்தாலே, அவர்களுடைய கருத்துகளுக்கு, நாடாளுமன்றத்திலும், அரசிலும், ஏன் நாடு முழுவதிலும் ஆதரவு பெற முடியும். அல்லது இது குறித்து மனப்பூர்வமான ஒரு முயற்சியை எடுக்க முடியும். நாட்டில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது, அதற்குக் காலம் ஆகும். என்றாலும், அதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்து குறித்து மனோ கணேசன் என்ன நினைக்கிறார் என்று தெரியவில்லை.

இந்தப் பின்னணியில், மனோ கணேசன் தனது முயற்சியில் ஆளும் தரப்பைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் ராமநாதன் மற்றும் கிழக்கில் இருந்து பிள்ளையான் ஆகியோரையும் இந்த அரங்கில் இணைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளாரா, என்பது குறித்தும் தெரியவில்லை. ஏன், அவர் சார்ந்த மலையகத்தின் அமைச்சரான ஜீவன் தொண்டைமானை அரங்கத்திற்குள் வர அனுமதி அளிப்பாரா, என்பதும் புரியாத புதிரே.

இவ்வாறு, அனைத்து தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகளின் அமைப்பு என்றால், மனோ, தமிழ் பேசும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை எவ்வாறு மறந்தார்? அவர்கள் வேறு இனம் என்று யாராவது கூறுவார்கள் என்றால், மலையகத் தமிழர்களும், நாட்டின் அரசியல் மற்றும் அரசியல் யாப்பின் கீழ் தனித்துவம் உள்ள இனம்தான். அதாவது, அவர்களில் ஒருவர் பங்குபெற்றால், அந்த அரங்கத்தினுள் மற்றவருக்கும் அழைப்பு விடுத்து, இணைத்துக் கொள்வதே அரசியல் நாகரீகம். நடைமுறை அரசியலும்கூட.

எடுத்தோம், கவிழ்தோம்

மனோ கணேசனின் தற்போதைய முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றே. ஆனால், அவரது எடுத்தோம் – கவிழ்தோம் அரசியல், இத்தகைய முயற்சிகளுக்கு முட்டுகட்டையிடும். அதுவே, தற்போதும் நிகழ அதிக வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு ஒரு அறிவித்தலின் மூலம் ஓர் அரங்கை நிறுவுவதை விடுத்து, அனைத்து கட்சிகளுடன் தனிதனியாகவும், குழுக்களாகவும் சந்தித்து இந்த முயற்சியை எடுத்திருக்கவேண்டும். அவ்வாறு செய்தால் அது வெற்றியில் முடியும் என்பது அர்த்தமல்ல. ஆனால், அவ்வாறு செய்யாவிட்டால், இந்த முயற்சி தோல்வியிலேயே முடியும். என்றாலும், இன்னமும் காலம் இருக்கிறது. மனோ, பிற கட்சியினரை கலந்தாலோசித்து இந்த முயற்சிக்கு முழு வடிவம் கொடுக்கலாம். குறிப்பாக தான் சேர்ந்து நிற்கும் எதிர் கட்சி கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்வாங்கிக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். இதுவே, ஆளும் கூட்டணியில் உள்ள தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும்.

இன்னும் சொல்லப்போனால், இனப்போர் உச்சத்தில் இருந்த கால கட்டத்தில்கூட, நாடாளுமன்றத்தின் மொத்தம் 225 உறுப்பினர்களில் சுமார் 50 பேர் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களில் சிலராவது அன்றைய ஆளும் கட்சியிலும், ஆளும் கூட்டணியிலும்கூட இருந்தார்கள். போர் காரணமாக, அவர்களிடையே இருந்த பிரிவுகளே அதிகம் வெளியில் தெரிந்தன. இன்று, மொத்தம் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக்கூட யாரும் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. இதில் மனோ கணேசனும் அடக்கம்.

### மூக்கறுபட்டு

கடந்த வருடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உள்வீட்டு விவகாரங்களில் சமாதான தூதுவர் என்ற வகையில் ஒரு தரப்பினரால் மட்டும் அழைக்கப்பட்டு, மூக்கறுபட்டு திரும்பியதை மனோ கணேசன் மறந்திருக்க மாட்டார். அப்போது, பதிமூன்றாது திருத்தம் முழுமையாகச் செயல்படுத்தப்படுவது குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதும் பிரச்சினையில், மனோ மற்றும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் அழைக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டார்கள்.

அவர்களை அழைத்தது, அன்றைய கொசுறு வகையாறாவில் இருந்த செல்வமும், சித்தார்த்தனும். அவமானப்படுத்தியது, தமிழ் அரசுக் கட்சி. அதனை சம்மந்தனே நேரடியாக செயல்படுத்தினார். அப்போது அவர் கூறிய காரணம் இப்போதும் பொருந்தும். அதனை மனோ கணேசனும் உணர வேண்டும்.

அதாவது, இனப்பிரச்சினை என்பது, வடக்கு – கிழக்கு சார்ந்த மக்களின் விடயம். இதில், தமிழ் மொழி பேசும் மலையக மக்களுக்கும் முஸ்லீம் இனத்தவருக்கும் பங்கு இல்லை. எனவே, அவர்கள், இந்த பிரச்சினையை வெளியே இருந்து வேடிக்கை மட்டுமே பார்க்கலாம். நேரடியாக தலையிட முயற்சிக்ககூடாது. இதுதான், சம்மந்தன் அப்போது கூறியவற்றின் சாராம்சம். உண்மையும்கூட.

இதனைதான், தந்தை செல்வா தமிழ் மொழி பேசும் அனைத்து மக்களும் ஒரு சேர போராடவேண்டும் என்று கூறிய போது, மலையக தமிழர் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் எதிர்த்துரைத்தார். அவர் அப்போது கூறியது போல், இன்றளவும் மலையக மக்கள், வறுமையை எதிர்த்து போராடுகிறார்கள். ஆனால், வறுமையில் இருக்கும் வடக்கு – கிழக்கு தமிழர்கள்கூட, உரிமைக்காகவே குரல் கொடுக்கிறார்கள்.

### பிறிதொரு உண்மை

இதற்கு அப்பால், பிறிதொரு உண்மையும் உள்ளது. வடக்கு – கிழக்கு தமிழ்த் தலைவர்கள், தங்களுக்குள்ளேயே தலைமைத்துவத்துக்கு அடித்து கொள்பவர்கள், விடுதலை புலிகள் அமைப்பின் காலத்தில் தங்களுக்குள்ளேயே பிறரை படுகொலையும் செய்ய தயங்காதவர்கள், அவர்கள் தற்போது, வெளியே இருந்து வரும் எந்தவொரு தலைவரையும் சந்தேகத்துடனேயே பார்ப்பார்கள். பார்க்கிறார்கள்.

ஏன், யாழ்பாண தமிழர்கள், வன்னி மற்றும் கிழக்கு மாகாண தமிழர் தலைவர்களையே ஏற்றுக் கொள்ளாதவர்கள். சமகால சரித்திரத்தின் கட்டாயத்தால் சம்மந்தனை முதலில் ஒப்புக்காக ஏற்றுக் கொண்டார்கள். அவரோ, அவர்களை எல்லாம் தூக்கி சாப்பிடும் வகையில் உள்வீட்டு அரசியல் செய்தார். அவருக்கு தென்னிலங்கையில் கிடைக்கும் மரியாதையும், சர்வதேச அங்கீகாரமுமே அவரை தலைமைப் பொறுப்பில் தொடர்ந்து நிலை நிறுத்தியது.

என்றாலும், எப்போது சம்மந்தனுக்கு உடல் தளர்ச்சி ஏற்பட்டதோ, அப்போதே அவரை மரியாதைக் குறைவாக நடத்த ஒரு சிலர் முயன்று, அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர். அந்த காலகட்டத்தில் தானே, இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதும் விவகாரத்தில், மனோ கணேசனையும் ரவூப் ஹக்கீமையும் பஞ்சாயத்துக்கு அழைத்தார்கள்!

### பிரச்சினை சார்ந்த ஆதரவு

எனவே, தமிழ் பேசும் அரசியல் தலைமைகள், அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஓர் அமைப்பை எடுக்கும் முடிவை தடாலடியாக முன்னெடுக்காமல், பிரச்சினை சார்ந்த ஆதரவு என்ற நிலையில் தொடங்கலாம். உதாரணத்திற்கு, தற்போது பிரச்சினைக்குள்ளாகி இருக்கும் வெடுக்குநாறி, குருந்தூர் மலை கோவில் விவகாரங்களில், தமிழ் அரசு உறுப்பினர்களே, நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அதிகம் பேசி வருகிறாஜுகள்.

இந்த பிரச்சினையில், வடக்கை சார்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், மலையகத்தின் ஜீவன் தொண்மானும்கூட நேரடியாக பங்கு பெற்று, தமிழர் ஆதரவு நிலையை எடுத்துள்ளார்கள். இதில், மனோ கணேசன் போன்றோர், இந்த அமைச்சர்களையும் உள்ளடக்கி, ஒருமித்த தமிழ் நாடாளுமன்ற கருத்தினை உருவாக்கவும், அதற்கு சிங்கள உறுப்பினர்களிடையே ஆதரவு கோரவும் முயற்சி மேற்கொள்ளலாம். மேலை நாடுகளில், ‘காகஸ்’ என்று அறியப்படும் அரங்கம் போன்ற அமைப்புகள் எல்லாம், இவ்வாறுதான் அரசியல் செய்கின்றன.

இந்த முயற்சியை மனோ முன்னெடுத்தால், அதற்கு முதலில், தமிழ் அரசுக் கட்சியே முட்டுகட்டை போடும் என்று எதிர்பார்க்கலாம். வடக்கில், குறிப்பாக டக்ளஸ் மற்றும் அங்கஜன் ராமநாதன், கிழக்கே பிள்ளையான் ஆகியோர் குறிப்பாக தமிழ் அரசிற்கு தீண்டத்தகாதவர்கள். மனோ கணேசனே, ஜீவன் தொண்டமானை முழுவதுமாக ஏற்றுக் கொண்டுள்ளாரா, என்பதே சந்தேகம்.

எதிர்க் கட்சியில் இருந்தாலே, எல்லோரையும் எதிர்க்க வேண்டும் என்ற தமிழ் பேசும் அரசியல் தரப்புகளின் மனநிலை மாறவேண்டும். இதற்கு, தற்போதைய வெடுக்குநாறி, குருந்தூர் மலை பிரச்சினை தொடங்கி, பல்பேறு தமிழ் மொழி பேசும் மூவினதவர்கள் கவலைகளிலும் ஒருமித்த நிலைபாட்டை அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுப்பதற்கு, மனோ கணேசன் முன்னெடுப்புகளை மேற்கொள்ளலாம்,

மேற்கொள்ளவேண்டும். இந்த முயற்சி வெற்றி பெற்றால், அண்மை காலத்தில், வடக்கே. தமிழ் மொழி பேசும் இந்து – கிறிஸ்தவ மதத்தவர்களிடையே தோன்றியுள்ள வேறுபாடுகளையும் இடைவெளியையும் கூடக் களைய முடியும். இல்லாமல் ஆக்க முடியும். அவை களையப்பட வேண்டியவை. இல்லாமல் ஆக்கப்பட வேண்டியவை.

இது தவிர, தமிழ் பேசும் முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த அமைப்பில் இணைத்துக் கொள்வது குறித்தும் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மற்ற இரு தமிழ் பேசும் இனத்தவரிடையே உள்ளது போல், முஸ்லீம் மக்களிடையேயும் அரசில் தலைமைகள் பிரிந்தே உள்ளன. இதுவல்ல, முஸ்லீம் காங்கிரஸ் நிறுவனர் அஷ்ரப் விரும்பியது, எதிர்பார்த்தது.

இது இவ்வாறானால், விடுதலை புலிகள் அமைப்பின் காலத்திற்கு அப்பாலும், முஸ்லிம் மற்றும் வடக்கு – கிழக்கு தமிழர்களிடையே கொள்கை ரீதியான ஒரு வேறுபாடு உள்ளது. முன்னவர்களை பொறுத்த வரை, உதித்த ஞாயிறு தீவிரவாத தாக்குதலை நடத்திய முஸ்லிம் இனத்தவரை, அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால், பின்னவர்களோ, இன்றளவும் பிரபாகரனை பூசிக்கிறார்கள். இந்த கொள்கை ரீதியான, மனநிலை ரீதியான இடைவெளியை மனோ எவ்வாறு இல்லாமல் ஆக்கப் போகிறார்?

காலைக்கதிர்
Kalaikkathir




# வாழ்க்கையை மேம்படுத்தும் பண்புகள்

தற்போதைய இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்குமனிதத்தன்மைகுறைந்துகொண்டே வருகின்றது. நாம் வாழ்க்கையை நல்ல முறையில் வாழ்வதற்கு நற்பண்புகள் அவசியமாகின்றன. ஆனால் தற்போது நல்ல பண்புகள் நம்மிடையே அருகிக் கொண்டே வருகின்றது. இதனால் நமது சமூகத்திலே அமைதியின்மை, வன்முறைகள், சட்டங்களைப் பேணாமை என்பன ஏற்படுகின்றன. நாம் இங்கு நமது வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளைப் பற்றி நோக்குவோம். முதலில் நமது வாழ்க்கைக்குத் தேவையானது கல்வியோ பணமோ அல்ல நல்லொழுக்கங்களே நமது வாழ்க்கைக்குத் தேவையானது ஆகும். ஒழுக்கத்தைப் பற்றி ஒவ்வொரு மதமும் தங்களது புனித நூல்களிலே குறிப்பிடுகின்றன. அதாவது ஒருவருக்கு கல்வியோ பணமோ இருந்தாலும் அவன் ஒழுக்கமற்றவனாக இருந்தால் அவன் இந்த சமூகத்தில் வாழ அருகதை அற்றவன். அதனையே உலகப் பொதுமறையை நமது கைகளுக்குத் தந்த திருவள்ளுவர் மிக அழகாகப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓப்பப்படும்'

இது மட்டுமல்லாது ஒரு மனிதன் பிறர் நமக்குச் செய்த உதவியினை மறக் கக்கூடாது. அதாவது ஒரு இக்கட்டான சூழ் நிலையிலே நமக்கு யாராவது உதவி செய்வார்கள். அவர்கள் நமக்குச் செய்த உதவியை நாம் எப்போதும் மறந்து விடக்கூடாது. இவ்விடயத்தை நீதிப்பாடலிலே நாயையும் யானையையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அதாவது எஜமான் சினங்கொண்டு நாயின் மேல் கத்தியை வீசினாலும் அது அன்பின் அறிகுறியாக வாலை வழைத்து ஆட்டும். ஆனால் யானையோ அவ்வாறல்ல அது தனக்குஉணவுகொடுத்துவந்தபாகனையே கொல்லும் என்று கூறப்படுகின்றது.

'தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன்றெறிவர்'

இக்குறனின் மூலம் ஒருவர் தினைபோல சிறிதளவு உதவிசெய்தாலும் அதனைப் பனையைப்போல் பெரிதாக எண்ணுவார்கள் பெரியவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இவை மட்டுமல்லாது சமூகத்திலே வன்முறைகள் ஏற்படுவதற்கு ஒரு முக்கியமான விடயம் இனிய சொற்களை மற்றவர்களுக்கு கூறாமை. மற்றவர்களுக்கு நாம் எப்போதும் இனிய சொற்களைக் கூறி அன்போடு நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் இனிய சொற்களை நமது சமூகத்திலே வன்முறை என்ற சொல்லுக்கு இடமிருக்காது. இதனையே திருவள்ளுவப் பெருந்தகை

'நயன் ஈன்று நன்றி பயர்க்கும் – பயன்
ஈன்று பண்பின் தலை பிரியாச் சொல்'

அதாவது நாம் ஒருவருக்கு நன்மை தரக்கூடிய சொற்களைக் கூறுதலே சிறந்த பண்பென்று கூறுகின்றார்.

மேலும் மனித வாழ்வை மேம்படுத்துவதற்கு நாம் அனைவரும் உண்மை பேச வேண்டும். அதாவது நாம் வாயினால் சொல்வதனால் வாய்மை என்றும் பொருள்படும்.

'வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
பொய்மை இலாச் சொல்'

அதவாது வாய்மை எனப்படுவது என்னவென்றால் நாம் அனைவருக்கும்; எந்தக் காரணங்கொண்டும் பொய்சொல்லக்கூடாது. நமக்கு அனைவருக்கும் எந்த காரணம் கொண்டும் பொய் சொல்லக்கூடாது. நமக்கு அனைவருக்கும் நன்கு தெரிந்த அரிச்சந்திர மகாராஜா வாய்மையின் சிகரமாக விளங்குகின்றார். மேலும் நமது திருவள்ளுவர் கூறுகின்றார் ஒருநன்மைக்குச்சொல்லும்பொய்யினால் வறொன்றும் இல்லை என்கின்றார். உதாரணமாக ஒருவனை கொல்வதற்காக சிலர் துரத்திக் கொண்டு வருகின்றார்கள். அப்போதுஅவன்உங்கள்அருகில்ஒளிந்து கொண்டு தன்னை காட்டிக் கொடுக்க வேண்டாம் என்று சொல்கின்றான். அவனை கொல்வதற்காக சிலர் துரத்திக்கொண்டு வருகின்றார்கள். அப்போது அவன் உங்கள் அருகில் ஒழிந்து கொண்டு தன்னைகாட்டிக்கொடுக்கவேண்டாம்என்று சொல்கின்றான்.அவனைகொல்லாதவர்கள் யாராவது இங்கு வந்தார்களா என்று கேட்கின்றனர். அப்போது நீங்கள் இங்கு யாரும் வரவில்லை என்று பொய்கூறி அவனைக் காப்பாற்றினால் அதில் ஒன்று தவறில்லை.

மேலும் வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்பினுள் ஒன்றுதான் அன்பு. அதாவது நாம் அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். அன்பு எனப்படுவது என்னவென்றால் நாம் மற்றவர்களிடத்திலே காட்டுகின்ற ஈடுபாடு ஆகும். நாம் அன்பினை நமக்கு தெரிந்தவர்களிடத்தில் மாத்திரம் காட்டாது அனைவரிடத்திலும் காட்டவேண்டும். அன்பினைப்பற்றிவள்ளுவப்பெருந்தகை அன்புடமை என்ற அதிகாரத்தில் மிக அழகாக எடுத்தக் காட்டியுள்ளார்.

'அன்பிற்குண்டோ அடைக்குந்தாள்
புண்கணீர் பூசல் தரும்'

இவை மட்டுமேல்லாது ஒரு மனிதனின் வாழ்க்கையைத் தீர்மானிப்பது கல்வியே ஆகும். ஒரு மனிதனது கல்வியே அவனது அடையாளமாகக் கருதப்படும். இதனைத் திருவள்ளுவர் மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

'கற்கக்கசடற கற்கவை கற்றபின்
நிற்க அதற்குத்தக'

அதாவது ஒரு மனிதன் நல்ல கல்வியினை கற்க வேண்டும். பிற்பாடு அவன் கற்ற கல்வியின் படி நின்று ஒழுகவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். அதாவது கல்வி அனைவருக்கும்முக்கியமானதொன்றாகும். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்று பழமொழி உணர்த்தி நிற்கின்றது. அதாவது ஒரு மனிதன் கல்வியில் சிறந்து விளங்கினால்என்றால்அவன்சமூகத்திலே எதிர்நோக்கும் சவால்களுக்கு இலகுவாக முகங்கொடுத்து மீண்டுவர முடியும்.

இவை மட்டுமல்லாது நாம் பொறுமையுடனும்வாழவேண்டும். நமதுவரலாற்றுப் பாதையினை நாம் நோக்குவோமானால் பல மன்னர்களும் பல பெரியோர்களும் பொறுமையுடன் இருந்து தங்களுடைய அடைந்திருக்கிறார்கள். அதாவது அவர்களுக்கு பிரச்சினைகளோ சோதனைகளோ ஏற்பட்டால் அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு தமது வாழ்க்கையிலே வென்றிருக்கின்றார்கள்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல்
தம்மை இகழ்வாரைப்
பொறுத்தல் தலை'

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். அதாவது விவசாயிகள் நிலத்தினை அகழ்ந்து கொண்டிருக்கும் வேளையிலே அதனைத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும். பொறுமைக்கு சிறந்த உதாரணமாக நாம் மகாபாரத்திலே வரும் தர்மனை எடுத்துக் கொள்ளலாம்.

மேலும், நாம் அனைவரும் மதித்து நடக்கவேண்டும். நாம் இனம், மதம், மொழி பேதம் என்பவற்றை கருத்திற்கொள்ளாது அனைவரும் சமம் என்ற எண்ணத்துடன் மதித்து நடக்க வேண்டும். இவை மட்டுமல்லாது நாம் தவறான வழிகளுக்குச் செல்லாது வாழ்க்கையை சரியான பாதையிலே கொண்டு செல்லவேண்டுமானால் நாம் இறைவனிடத்தே பக்திகொள்ள வேண்டும். நமது மனத்தினைத் தவறான திசைகளுக்குக் கொண்டு செல்லாது மனதினை ஒரு நிலைப்படுத்தி இறைவன்பாற் கொண்டு செல்ல வேண்டும்.

நாம் இயலுமானவரை மற்றவர்களிடத்தே அவர்களது மனத்தினைப் புண்படுத்தும் வகையில் அல்லாது இனிய சொற்களைக் கூறவேண்டும்.

'இன்சொலால் ஈரம் ளை இப்படிறு இலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்'

அதாவது ஒருவர் மனம் உவந்து ஒரு பொருளைக் கொடுப்பதை விட முகம் மலர்ந்து வாழும் நாம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அதாவது மனிதனுடைய வாழ்க்கையிலே விட்டுக்கொடுக்கும் பண்பு ஒரு முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. நாம் நமது சகோதரர்களிடத்திலும் நண்பர்கள் இடத்திலும் விட்டுக் கொடுத்து நடந்துகொள்ள வேண்டும்.

மனிதனின் மேன்மைக்கு கலையுணர்வும் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றது. அதவாது இசை, நடனம் என்பன ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றன. அதாவது ஒரு மனிதன் தவறானவழியில்செல்லாமல் இருப்பதற்கு மனிதனது மனதினைச் சாந்திப்படுத்த இவ்வாறான கலைகள் உதவுகின்றன. இவ்வாறு மனிதன் தனது எண்ணங்களையும் செய்கைகளையும் வேறு திசைக்குத் திருப்புவதனால் அவனால் வாழ்க்கையை சுமூகமாகக் கொண்டுசெல்ல இயலும்.

மனிதனது வாழ்க்கைக்கு ஒரு முக்கியமான விடயம் பெரியோர் சொற்கேட்டு நடத்தலாகும். பெரியோர்கள் தமது அனுபவத்தின் ஊடாக நமக்கு நல்லவகையாள புத்திமதிகளைக் கூறுகின்றார்கள். அவர்கள் இவ்வாறு நமக்குக் கூறும் புத்திமதிகளை நாம் கேட்காது நமது மனப்போக்கில் நமது காரியங்களைச் செய்யக் கூடாது.

எனவே நாம் உலகப் பொதுமறையில் திருவள்ளுவர் நமக்கு கூறிய நல்ல பண்புகளை நம்முன் வளர்த்து தீமையான பண்புகளை விலக்கி இந்த சமூகத்தையும் எமது எதிர்கால சமுதாயத்தையும் நல்ல நிலைக்குக் கொண்டுசெல்வோமாக.

செல்வி. பி. கிறிஸ்மிதா
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

---

# குல தெய்வம்

ஒவ்வொருவரும் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வரும் தெய்வம் குலதெய்வம் ஆகும். அதுவே அந்தப் பரம்பரையைக் காக்கும் தெய்வமுமாகும்.

நாம் விரும்பி வழிபாடும் தெய்வங்கள் இஷ்ட தெய்வம் எனப்படும். இஷ்ட தெய்வங்கள் பல இருக்கலாம். ஆனால் குல தெய்வம் என்பது ஒன்றாகவே இருக்கும்.அது எமது தாய் வழி அல்லது தகப்பன் வழி மூதாதையர், வழிவழியாகப் பக்தியுடன் வழிபட்டதாக இருக்கும்.

அந்தக்குலதெய்வவழிபாடு மக்களுக்குப் பல வழிகளிலும் பயன்தரவல்லது.எவ்வாறெனின்! பின்வரும் உதாரணத்தை நோக்குங்கள் .

எம் ஒவ்வொருவருக்கும் குடும்ப வைத்தியர் என்பவர் இருப்பார்.அந்தக் குடும்ப வைத்தியருக்கு குடும்ப அங்கத்தவர்களுடைய உடல் நலன் பற்றிய வரலாறு தெரிந்திருக்கும்.சில நோய்கள் பரம்பரை சார்ந்தது என்று மருத்துவம் கூறுகின்றது.ஆஸ்த்மா போன்ற பல நோய்கள் அவ்வாறு கூறப் படுகின்றன. இடமாற்றம். காலநிலை மாற்றம் என்பன் இந்த பரம்பரை நோய் அறிகுறிகளில் மாற்றம் ஏற்படுத்தலாம் என்ற கருத்து ஒரு புறம் இருந்தாலும் பரம்பரை நோய்களை அறியக்கூடிய ஆற்றல் குடும்பவைத்தியருக்கே இலகுவில்சாத்தியமானதுஎன்பது நிதர்சனமானது.

அதே போன்று பரம்பரை பரம்பரையாக வழிபடப் பட்டு வரும் குல தெய்வமே எமது குடும்பத்தினரின் கர்ம பலன் அறிந்து சரியாக வழிநடத்தி அருள் பாலிக்கும் ஆற்றல் கொண்டவர் என்பதி மறவற்க.

எமது பூர்வீக கிராமத்தின் காவல் தெய்வமே பெரும்பாலும் எமது குலதெய்வமாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

இன்றைய நவீன யுகத்தில் தொழில்காரணமாகவோஅல்லது வசதி காரணமாகவோ அல்லது வேறுஅகப்புறக்காரணிகளாலோ தமதுசொந்த, பூர்வீக இடங்களில் வாழ்பவர் தொகை கணிசமாக எம்மிடை குறைந்துள்ளது.அதன் காரணமாகக் குலதெய்வங்கள் பராமரிக்கப் படாத அவல நிலை எம்மத்தியில்.

பூசைகளோ அல்லது நைவேத்தியம் போன்றனவோ அவர்களுக்கு இல்லாது போய் விட்டன.அவை குறைந்த பட்சம் நீரைக் கண்டு பல வருடங்கள் ஆகிவிட்டன.

இன்னும் சிலருக்கு தமது குலதெய்வம் யார் என்று கூடத் தெரியாத துர்ப்பாக்கிய நிலையும் உண்டு என்பதும் கவலைக் குரியதே!

காலம் காலமாக எமது சந்ததியினைக் காப்பாற்றி அருளிய குலதெய்வங்கள் கவனிக்கப் படாதிருத்தல் நன்றி மறக்கும் செயற்பாட்டின் உச்சம்.எமது இனத்தின் பல்வேறுபட்ட பின்னடைவுகளுக்கு இதுவும் ஒரு காரணமாகலாம்.

தமது குல தெய்வம் தெரியாதவர்கள் மூத்தோரிடம் கேட்டறிந்து அல்லது தமது பூர்வீக இடத்துக்குச் சென்று அறிந்து கொள்ளுங்கள்.

எமது குல தெய்வங்களை பேணிக்கொள்ள ஆவன செய்வோம்.

**- தாமரை நாயகன் -**

---

# யாழ். ஆரோக்கிய நகர செயற்திட்டம்

## ஓர் பார்வை

– ஆர். சுரேந்திரகுமாரன் –

உலக சுகாதார தினமானது ஒவ்வொரு ஆண்டும்உலகசுகாதார அமைப்புதொடங்கப்பட்ட தினமான ஏப்ரல் 7 கொண்டாடப்பட்டுவருகின்றது. இந்தத் தினமானது அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியம் பற்றிய ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு நிறுவனமாகும் . இது உலகின் பொது சுகாதாரத்தில் கவனம் செலுத்தும் ஒன்றாகும்.

உலக சுகாதார தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளினை மையமாக கொண்டு கொண்டாடப்படுகின்றது. இக் கருப்பொருளானது பிரதானமாக தற்காலத்தில் உள்ள சுகாதார பிரச்சினைக்கான ஓர் கவனத்தையும் விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டிருக்கும்.

இந்தவருடம்அனைவருக்கும்சுகாதாரம்என்ற கருப்பொருளினை மையமாக கொண்டுள்ளது .

ஒரு நாட்டின் சுகாதாரத்திற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அந்த நாட்டில் உள்ள நகரங்கள் பொதுவாக முக்கிய பங்கினை வகித்து வருகின்றன.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும்நாடுகளில்நகரம்கள்ஒரு முக்கியபங்காகும். ஏனெனில் அதிகரித்து வரும் சனத்தொகை மற்றும் வளர்ச்சி அடைந்துவரும் உட் கட்டமைப்பு வசதிகள் என்பன முறையான சுகாதாரத்தை அணுகுவதற்கு இங்கு தடையாக இருக்கின்றன.

உலக சுகாதார அமைப்பானது பல தசாப்தங்களாக ஆரோக்கிய நகரங்களை உருவாக்குவதில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆரோக்கிய நகரம் என்பது பௌதிக மற்றும் சமூகச் சுழலினை மேம்படுத்திக் கொள்வதோடு அங்கு வாழும் மக்கள் தமது திறன்களை வளர்த்துக்கொண்டு ஓர் ஆரோக்கியம் மிக்க வாழ்க்கையைத் தாமாக ஏற்படுத்தி கொள்வதற்கு வழிபடுத்துவதொன்றாகும்.

இச்செயற்திட்டமானது பல்வேறு நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு கணிசமான ஆரோக்கிய நகரங்களை அடையாளப்படுத்தியுள்ளது.

இச்செயற்திட்டமானது யாழ். மருத்துவபீடத்தின் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவ அலகின் நேரடி ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப் படுத்தலில் யாழ். மாநகர சபை, சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ். மாவட்ட செயலகம், யாழ். பிரதேச செயலகம், மாகாண கல்வித் திணைக்களம், மேலும் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ் ஆரோக்கிய நகர திட்டம் என்பது அதன் பெயர்.

இத் திட்டமானது 5 பிரதானமாக கருப்பொட்களைக் கொண்டுள்ளது. கழிவு முகாமைத்துவ மேம்பாடு, போசாக்குணவு மேம்பாடு, உடல் மற்றும் உள ஆரோக்கிய மேம்பாடு, நீர் மற் றும் சுகாதார மேம்பாடு அத்துடன் தொற்றா நோய்களுக்கான தடுப்பு என்பவற்றை நோக்கமாக கொண்டு செயற்பட்டு வருகின்றது .

இது 3 சுற்று சூழல்களான பாடசாலை, பொது இடங்கள், அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றில் ஆரோக்கியத்தை மேம்படுத்திவதனை நோக்கமாக கொண்டுள்ளது. அந்த வகையில் பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவ சுகாதார மேம்பாட்டிற்கு பிளாஸ்டிக் பாவனை அற்ற பாடசாலையை உருவாக்குவதற்க்காக பயிற்சிப் பட்டறைகளை இத்திட்டம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ். மாநகர சபைக்குள் அடங்கும் 23 பாடசாலைகளில் பயிற்சிகளை நடத்தி உள்ளோம். மேலும் நீர் மற்றும் சுகாதார மேம்பாட்டின் கீழ் பாடசாலைகளில் பெண் மாணவர்களுக்கான மாதவிடாய் சுகாதாரம் எனும் பயிற்சி பட்டறையினையும் வழங்கி வருகின்றோம். மேலும் சில அது தொடர்பான கற்றல் புத்தகங்களை உருவாக்கி விநியோகித்து வருகின்றோம்.

உடல் மற்றும் உள ஆரோக்கிய மேம்பாட்டிற்காக பாடசாலை மாணவர்கள் மத்தியில் துவிச்சக்கர வண்டி பாவனையை அதிகரிப்பதற்காக கடந்த வருடம் துவிச்சக்கர வண்டி விழிப்புணர்வு பயணம் ஒன்றை நடத்தி தொடர்ந்து அதனை மேம்படுத்துவதற்காக மாணவர்கள் துவிச்சக்கர வண்டியில் பயணிப்பதற்கான சூழலை உருவாக்குவதில் ஆர்வமாகச் செயற்பட்டு வருகின்றோம். மேலும் பாடசாலை தோட்டம் என்ற எண்ணக்கரு ஊடாக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.


பாடசாலையில் மாணவர்களின் போசணையை அதிகரித்துக்கொள்ள சுகாதாரமான சிற்றுண்டிச் சாலைகளை உருவாக்குவதற்கான திடங்களை மேடற்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு நாம் எமது தொடக்க கட்ட நடவடிக்கைகளை பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தி வருகின்றோம். எமது இச்செயற்பாடுகளை அலுவலகங்கள் மற்றும் பொது இடம்களில் மேற்கொள்வதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றோம் .

நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம் மட்டுமே எமது நகரை ஆரோக்கியம் மிக்க நகராக மாற்ற முடியும். எமது நகரை ஆரோக்கியத்தின் பாதையில் கொண்டு செல்வதற்கு நாம் ஒவ்வொருவரும் எடுக்கும் சிறிய முயற்சியும் எமது நகத்தின் ஆரோக்கியமான பயணத்திற்கு வழிவகுக்கும் .

ஆரோக்கியமான மக்கள், ஆரோக்கியமான நகரம், ஆரோக்கியமான நாடு

**கட்டுரையாளர்: பீடாதிபதி,
மருத்துவ பீடம், யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்**



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.04.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 23 வியாழக்கிழமை 06.04.2023 கதிர் 20

## ஆட்சிமாற்றம் மிக அவசியம்

### அநுரகுமார வலியுறுத்து



நாடு மீண்டெழ வேண்டுமாயின் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க 2

ආරක්ෂක අමාත්‍යාංශය
Ministry of Defence

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

சமூக ஊடகங்களில் பரவிவரும் பொய்யான செய்தி தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அனைத்து தொலைபேசி உரையாடல்களையும் பதிவு செய்தல், தொலைபேசி அழைப்புகளை சேமித்தல், வாட்ஸ்அப், பேஸ்புக், ருவிட்டர் அழைப்புகளை கண்காணிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனச் சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்கள் முற்றிலும்தவறானவை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (02)

# கடும் எதிர்ப்பையடுத்து பின்வாங்கியது ஆட்சி

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதை ஒத்திவைப்பதாக அமைச்சர் அறிவிப்பு

அனைத்துத்தரப்புக்களிலிடமிருந்தும் எழுந்த கடும் எதிர்ப்பையடுத்துப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைப் பிற்போடுவது என தற்போதைய ஆட்சி தீர்மானித்துள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களிடம் இருந்தும் வந்த கோரிக்கைகளை அடுத்து சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதை ஒத்தி வைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டது என் அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக இந்தச் சட்டமூலத்தை ஏப்ரல் இறுதி வாரத்தில் அல்லது மே மாதம் முதல் மாதத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு ஆட்சியாளர்கள் திட்டமிட்டிருந்தனர்.

இந்தச் சட்டமூலத்திற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டமன்றி சிங்கள எதிர்க்கட்சிகள், பொது அமைப்புக்கள், பன்னாட்டுமனிதஉரிமைஅமைப்புக்கள் என எல்லாமுமே எதிர்ப்புத் தெரிவித்து வந்தன.

இது தொடர்பில் அண்மையில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணிகள் சங்கம், இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வருவதைத் தாமதப்படுத்தும்படி வலியுறுத்தியிருந்தது. இந்தச் சட்டமூலம் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக, சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எவற்றுடனும் கலந்துரையாடப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டியிருந்தது. (02)



## ஸ்ரீரங்காவை பதவி விலக்க நடவடிக்கை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜே.ஸ்ரீரங்காவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பான பிரேரணையை நிறைவேற்றஇலங்கைஉதைபந்தாட்ட சம்மேளனம் தயாராகி வருகின்றது என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களின் பங்குபற்றுதலுடன் கூட்டப்படவுள்ள உதைபந்தாட்ட சம்மேளனத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த ஜனவரி 21ஆம் திகதி முதல் இலங்கைக்கு சர்வதேச கால்பந்து போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் உதைபந்தாட்ட நிர்வாகம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன், அதன் ஊழியர்களுக்கு சம்பளம் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது கால்பந்து நிறுவனத்தின் தலைவராக உள்ள ஜே.ஸ்ரீரங்கா, வவு னியா மேல் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கு தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (02)

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் மொட்டின் தெரிவாகலாம்

### பஸில் சூசகமாகத் தெரிவிப்பு



தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பது மொட்டுக் கட்சியில் பலரினதும் விருப்பம் – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

முதலில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வரட்டும். அதன்பின்னர் வேட்பாளர் தொடர்பில் பேசி இறுதி முடிவு எடுப்போம் என்றும் அவர் கூறினார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதையஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவதற்கு மொட்டுவைச் சேர்ந்த பலர் விரும்புகின்றனர் என்று அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவிடம் வினவியபோது,

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என மொட்டுக்கட்சியில் பலர் யோசனை முன்வைத்துள்ளனர்.

எனினும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராகக் களமிறக்குவது என்பது தொடர்பில் மொட்டுக் கட்சி இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என்று தெரியாது. எனவே, வேட்பாளர் தொடர்பில் நாம் இப்போது அவசரப்படக்கூடாது.

மொட்டுக் கட்சி களமிறக்கும் ஜனாதிபதி வேட்பாளர்தான் வெற்றியடைவார் என்பது உண்மை.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர். அவர் மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பது மொட்டுக்கட்சியில் பலரினதும் விருப்பம்.

எனினும், இது தொடர்பில் அவருடன் நாம் உத்தியோகபூர்வமாகப் பேசவில்லை. முதலில் தேர்தல் தொடர்பில் அறிவிப்பு வரட்டும். அதன் பின்னர் வேட்பாளர் தொடர்பில் பேசி இறுதி முடிவு எடுப்போம். – என்றார். (02)

## "நரகத்து இடைவேளை"

### இலங்கையின் தற்போதைய நிலை குறித்து ஜேவிபி செயலாளர் ரில்வின் சில்வா கருத்து

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் இன்றைய நிலையை "நரகத்து இடைவேளை" என்று வர்ணித்தார் ஜேவிபியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா.

கட்சின்உயிரிழந்தஉறுப்பினர்களை நினைவுகூரும் ஏப்ரல் 5 களுத்துறை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். தற்போதைய நிலவரத்தை வைத்து இலங்கைபொருளாதாரமறுமலர்ச்சியை நோக்கி செல்வதாக மக்கள் நம்பவேண்டாம் எனவும், விரைவில் கடுமையான பொருளாதார சரிவு ஏற்பட்டுநாடு இன்னும் கடுமையான சூழலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் எச்சரித்தார்.

நாம் இப்போது நெருக்கடிக்குள் ஒரு இடைவெளியைக் கடந்து செல்கிறோம். இது உண்மையில் 'நரகத்தில் ஒரு இடைவெளி'. நாடு நெருக்கடியிலிருந்து வெளியே வரப் போகிறது என்று ஒருவர் நினைத்தால், அது பொய். இது ஒரு இடைவெளி மட்டுமே. நாடு சரியான திசையில் கொண்டு செல்லப்படாததால், நாம் இப்போது அனுபவித்ததைவிட இன்னும் மோசமான 2

## ஐ.நா. மனித உரிமைச் சட்டங்களுக்கு அமைய பயங்கரவாதச் சட்டம் உருவாக்கப்படவில்லை

### அம்பிகா சற்குணநாதன் கிளிநொச்சியில் தெரிவிப்பு




இலங்கை ஆட்சியாளர்கள் முன்வைத்துள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சட்டங்களிற்கோ, சாசனங்களிற்கோ அமைய இயற்றப்படவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர், சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை நாடாளுமன்றத்திற்கு உடனடியாகக் கொண்டு வருவதில்லை என நீதியமைச்சர் கூறியிருக்கின்றார். அது நல்ல விடயம் என்றுதான் கூற வேண்டும்.

இந்தச்சட்டமானது இரகசியமாகத்தான் தயாரிக்கப்பட்டது. பலஉரிமைகளில்தாக்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறானதொரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னர், மக்களின் அபிப்பிராயங்கள், சிவில் சமூகங்கள், சட்டத்தரணிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், நிபுணர்கள் ஆகியோரின்கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டிருக்கவேண்டும் –என்றார்.

## மீண்டும் எல்லை தாண்டிய மீனவருக்கு 14 மாதச் சிறை

### 11 இந்தியர்கள் நிபந்தனைகளுடன் விடுதலை

(ந.லோகதயாளன்)



இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி ஒரு தடவை நுழைந்து ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர் ஒருவர் மீண்டும் அத்துமீறி இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்ததால் அவருக்கு 14 மாத காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவருடன் முதற்றடவையாகக் கைதான மேலும் 11 மீனவர்களும் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

மார்ச் 23 எல்லைதாண்டி நெடுந்தீவுக் கடலில் மீன்பிடித்த சமயம் இரண்டு படகுகளில் இருந்த 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கே ஊர்காவற்றுறை நீதிமன்றம் சிறைத் தண்டனை வழங்கியது.

தில்லைக்காளி விசாகலிங்கம் (வயது 50) என்பருக்கே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 2022 மார்ச் 30 அன்று ரிஎன் 06 எம்எம் 540 என்ற பதிவு எண் கொண்டவிசைப்படகில்எல்லை தாண்டியகுற்றத்திற்காகஇவர் கைதுசெய்யப்பட்டிருந்தார. ஒருவருடம்கடந்துமீண்டும் 2023 மார்ச் 23 அன்று அதே குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். முதல் தடவை எல்லை தாண்டியபோது ஒத்தி வைக்கப்பட்ட6மாதச்சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டிருந்தது. அவர் மீண்டும் அதே குற்றத்தைச் செய்ததனால், அந்தத் தண்டனையுடன் இரண்டாவது தடவை அத்து மீறிய குற்றத்துக்கான 8 மாதச் சிறைத் தண்டனையும் சேர்த்து 14 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மற்றைய 11தமிழகமீனவர்களையும் நிபந்தனையுடன் விடுதலைசெய்துதீர்ப்பளித்தார் ஜே.கஜநிதிபாலன்.

### அனுராதபுரத்தில் சிறுவர் மருத்துவ பிரிவு மூடப்பட்டதைப் போன்று

## யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்தும் மருத்துவர்கள் வெளியேறும் நிலை வரலாம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்தும் மருத்துவர்கள் வெளியேறிச் செல்வதால் சில அலகுகள் மூடப்படும் நிலை ஏற்படலாம் என்று எச்சரித்துள்ளது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண ஒருங்கிணைப்பாளர் தனிகாசலம் மயூரன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 2

## தொடருந்து கடவை ஊழியர்கள் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

(பழுவூரான்)

தொடருந்துக் கடவை ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, நிரந்தர நியமனம் போன்றவற்றை வலியுறுத்தி வடக்கு கிழக்கு தொடருந்துக் கடவை காப்பாளர் ஒன்றியத்தினரால் இன்று மட்டக்களப்பு தொடருந்து நிலையத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஒருநாள்சம்பளம்250/போதுமா?, உடனடி நியமனம் வேண்டும், ஒரு மாத செலவு 35,000 ஆனால் எனக்கு ஒரு மாத சம்பளம் 7500/ 2



# இலங்கை மீளெழுச்சி பெற இந்தியா உதவ வேண்டும்

## ஜனாதிபதி ரணில் கோரிக்கை



இலங்கையில் சீர்திருத்தங்களை மேற் கொள்ள இந்தியா உதவ வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று 'த இந்து' செய்தி வெளயிட்டுள்ளது.

இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் தலைவர் பாரத் லால் தலைமையிலான இந்திய தூதுக்குழு அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தது.

இந்தக் குழுவினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக பாரத் லால் அறிக்கையொன்றை விடுத்துள்ளார் என்று 'த இந்து' தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கை தொடர்பான தனது தொலைநோக்குப் பார்வைகுறித்தும், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டுவளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தூதுக்குழுவிடம் தெளவுபடுத்தியுள்ளார்.

கொள்கை சீர்த்திருத்தங்கள், டிஜிட்டல் தொழில்நுட்ப பயன்பாடு, திறன் வளர்ப்பு, நல்லாட்சி, துறைசார் வல்லுநர்களை உருவாக்குவதற்கான அமைப்புகளை ஏற்படுத்துதல், பொதுமக்களுக்குத் திட்டமிட்ட காலவரையறைக்குள் சேவைகளை வழங் குதல் ஆகிய– வற்றை மையப்படுத்தி ஜனாதிபதியின் கருத்துக்கள்அமைந்திருந்தன என்று இந்தியாவின் நல்லாட்சிக் கான தேசிய மையத்தின் தலைவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரங் களில் இந்தியா, இலங்கைக்கு உதவ வேண்டும் என்றும், பொதுக் கொள்கைக்காக இலங்கையில் பல்கலைக்கழகம் அமைக்க உதவ வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (02)

## சிறகுகள் அமைய ஏற்பாட்டில் தொழில்நுட்பம்சார் பயில்களம்

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் தொழில்நுட்பம் சார் பயில்களம் விக்கிபீடியா சார்ந்த நிகழ்வாக 'விக்கிப்பீடியா வெளியினிலே..' எனும் தலைப்பில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 6.30 மணிக்கு இணையவழியில் இடம்பெறவுள்ளது.

விக்கிப்பீடியா என்பது, வணிக நோக்கற்ற விக்கிமீடியா நிறுவனத்தின் உதவியுடன் நடத்தப்படும், கூட்டாகத் தொகுக்கப்படும், பன்மொழி, கட்டற்ற இணையக் கலைக்களஞ்சியமாகும். விக்கிப்பீடியா தளத்தைக் கையாளும் வகையிலான வழிகாட்டல் பயில்களம்

உரையாளராக கணினித் தமிழ் ஆர்வலர் நீச்சல்காரன் தமிழ்நாட்டில் இருந்து கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் சூம் செயலி ஊடாக இணைந்துகொள்ள:

Meeting ID: 823 4846 7118 Passcode: 2023 Join Zoom Meeting https://us06web.zoom.us/j/82348467118?pwd=QXUvNk1t-dzBVbm9CRGdsT3kwSTdEZz09

நிகழ்வுதொடர்பானதெளிவூட்டல்களுக்கு 077 6075331 தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

# 3 வாள்கள், கஞ்சாவுடன் 4 சந்தேக நபர்கள் கைது



நமுனுகுலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிபிலேகம கடுவலவத்தை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வாள் மற்றும் கஞ்சா போதைப்பொருள் மறைத்து வைத்திருப்பதாகப் பதுளை பிராந்திய குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து சந்தேகத்துக்குரிய வீட்டைச் சோதனைக்குட்படுத்திய போது வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3 வாள்கள் மற்றும் கஞ்சா போதைப்பொருள் ஆகியன பதுளை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் திருமணமான நபர் ஒருவரின் நண்பர்களான கலங்கம தலவத்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 3 நபர்களிடம் இருந்து 2,150 மி.கி , 2000. மி.கி, 2,900 மி.கி கஞ்சா போதைப்பொருள் தனித்தனியே மீட்கப்பட்டுள்ளதோடு செல்லக்கதிர்காமத்தைச் சேர்ந்த நபரிடம் இருந்து 3 தடைசெய்யப்பட்ட வாள்களும் கைப்பற்றப்ப்பட்டுள்ளன.

குறித்த 46, 38 ,35 மற்றும் 28 வயதுடைய 4 சந்தேக நபர்களையும் கைது செய்து நமுனுகலை பொலிஸ் நிலையத்தில் பதுளை குற்றத் தடுப்புப் பிரிவினர் ஒப்படைத்துள்ளனர்.

பதுளை பிராந்திய பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சுஜித் வெதமுல்லவின் ஆலோசனையின் பேரில் நமுனுகுலை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

குறித்த சந்தேகநபர்கள் நால்வரையும் இன்று பசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நமுனுகுலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

## நிதி அமைச்சரான ஜனாதிபதியிடம்

# தேர்தலுக்குப் பணம் கோரிய கடிதத்துக்குப் பதில் இல்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான பணத்தை வழங்குமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்துக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதிக்குகி கடிதம் அனுப்பி ஒரு மாதம் நிறைவடையவுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

இதனிடையே, தேர்தலுக்குத் தேவையான நிதி தொடர்பில் கலந்துரையாடுவதற்கு உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் சந்தர்ப்பம் கோரப்பட்ட போதிலும், இதுவரை அதற்கும் எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிரதமருடனான கலந்துரையாடலை நடத்துவதற்கு இனியும் எதிர்பார்க்கவில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் எடுக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழு கூடி இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (02)

## உத்தியோகபூர்வ முகநூல் கணக்கை மறந்த ஜனாதிபதி



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தியோகபூர்வ முகப்புத்தக கணக்கு பல மாதங்களாக பதிவேற்றம் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ ருவிட்டர் கணக்கு மற்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவின் கணக்குகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

ரணில்விக்ரமசிங்கவின்உத்தியோகபூர்வ முகநூல் கணக்கில் கடந்த வருடம் ஜூலை 21ஆம் திகதிக்கு பின்னர் எந்தவொரு பதிவும் பதிவேற்றப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பொருளாதார கொடிய நோயில் நாடு கசப்பான மருந்தை பருக வேண்டும்

## ரஞ்சித் சியம்பலாபிடிய கூறுகிறார்



நாடு பொருளாதார பாதிப்பு என்ற கொடிய நோயை எதிர்கொண்டுள்ளது. நோய் குணமடைய வேண்டுமாயின், கசப்பான மருந்தை நிச்சயம் பருக வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை, செயற்றிட்டங்கள் கடந்த காலங்களை காட்டிலும் தற்போது வெளிப்படை தன்மையுடன் மேற் கொள்ளப்படுகிறது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்பேசுகையில்– தவறான பொருளாதார முகாமைத்து– வத்தால் நாடு மிக மோசமான பொருளாதார பாதிப்பு என்ற கொடிய நோயை எதிர்கொண்டுள்ளது. நோயைக்குணப்படுத்த காலம் கடந்த பின்னரே சர்வதேச நாணய நிதியம் என்ற வைத்தியரை நாடியுள்ளோம்.

நாணய நிதியத்தின் நிபந் தனைகள் கடுமையாகக் காணப்பட்டாலும், நோயை குணப்படுத்த கசப்பான மருந்தை பருக வேண்டும்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள அரசாங்கம் கடந்த 7 மாத காலமாக எடுத்த கடுமையான தீர்மானங்களின் பயனை நாட்டு மக்கள் தற்போது எதிர் கொண்டுள்ளார்கள். எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைவடைந்துள்ளது.

கடந்த காலங்களைக் காட்டிலும், சர்வதேச நாணய நிதிய விவகாரம் தற்போது வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்படுகிறது.

10 பிரதான நிபந்தனைகளை செயற்படுத்துவது தொடர்பாகத் துறைசார் நிபுணர்கள், பட்டய கல்வி துறைசார் நிபுணர்கள், நிதி துறையியலாளர்களுடன் பேச்சு களை மேற்கொண்டுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்காக முன்னெடுக்கப்படும்சகலபேச்சுகளையும் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துவோம்.

நாட்டு மக்கள் சிறந்த முறையில் சிந்திக்கிறார்கள். ஆனால், அரசியல்வாதிகள் பாரம்பரியமான அரசியல் கோணத்தில் இருந்துகொண்டு கருத்துரைக்கிறார்கள். –என்றார்.

## ஆட்சி மாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தினார். மாத்தளைப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சரிவடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமாயின் ஆட்சியாளர்களினதும் மக்களினதும் எதிர்பார்ப்பு ஒன்றாகவே இருக்கவேண்டும்.

கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் தேர்தல் ஒன்றை மகிழ்ச்சியாக எதிர்நோக்கியிருந்தனர். தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை தேர்தல் மேடைகளில் மூடி மறைப்பதற்காக தேர்தலை அவர்கள் எதிர்நோக்குவார்கள்.

எனினும், தற்போது அந்த நிலை மாறியுள்ளது. தங்களுடைய வாக்குகள் தங்களுக்கு எதிராகவே மாறியுள்ளதை ஆட்சியாளர்கள் அறிந்துள்ளனர் – என்றார். (02)

## நரகத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை நாம் அனைவரும் அனுபவிக்க வேண்டியிருக்கும்,

பொருளாதார சொத்துக்களை பெற்று உற்பத்தி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக கடன்களை பெற்று எமது சொத்துக்களை விற்று கடனில் மூழ்கிய நாடாக மாறிவிட்டோம். ஒவ்வொருவருக்கும் தற்போது 1.4 மில்லியன் ரூபா கடன் உள்ளது. கடன்களால் நாடு நெருக்கடியில் உள்ளது, அதற்கு தீர்வாக அரசாங்கம் அதிக கடன்களைப் பெறுகிறது என்று அவர் கூறினார். உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்தி, அதிகக் கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக பொருளாதாரச் சொத்துக்களைப் பெறுவதற்கான சரியான பாதையைப் பின்பற்றாமல் எவராலும் இலங்கையை இந்த நெருக்கடியிலிருந்து வெளியே எடுக்க முடியாது என்றும் சில்வா கூறினார்.

## யாழ்.போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த சிறுவர் வைத்திய நிபுணர்கள் நான்கு பேர் அண்மையில் நாட்டை விட்டு வெளியேறி உள்ள நிலையில் வைத்தியசாலையின் சிறுவர் விடுதி மூடப்பட்டமை தொடர்பில் ஆங்கில பத்திரிகைகளில் செய்தி வெளி வந்திருந்தது.

இதே நிலைமை யாழ்ப்பாணத்திலும் எதிர்வரும் காலங்களில் வரும் என நாங்கள் அச்சப்படுகின்றோம். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை என்பது மருத்துவ மாணவர்க ளின் கற்றல் செயற்பாட்டுக்கு உரிய ஒரு வைத்தியசாலை.

நோயாளர்களின் பிரச்சினைக்கு மேலதிகமாக , இந்த ஆட்சியாளர்களின் செயல்பாடு காரணமாக மருத்துவ மாணவர்களின் கல்விக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் உள்ள வைத் தியசாலைகளில் இருந்து , வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் , மற்றும் அனைத்து தரப்பினரும் குறிப்பாக எமது நாட்டுக்கு அவசியமான கல்விமான்கள் நாட்டை விட்டு வெளியேறு நிலையில் ஏற் பட்டுள்ளது. அதன் விளைவாக தற்பொழுது எமது கண்ணுக்கு முன்னால் அனுராதபுரம் வைத்திய சாலையின் சிறுவர் விடுதி மூடப்பட்டுள்ளது.

இது சம்பளப் பிரச்சினை மாத்திரமல்ல, இன்றைய ஆட்சியாளர்கள் எதிர்காலம் தொடர்பான அச்சத்தை தோற்றுவித்துள்ளனர். அதனாலேயே பலரும் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர் – என்றார்.

## தொடருந்து...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது போதுமா என்கின்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், குரல் எழுப்பியவாறும் கடவை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மட்டக்களப்பு தொடருந்து நிலையத்தின் அருகில் உள்ள வீதிக் கடவையிலிருந்து தொடங்கிய ஆர்ப்பாட்டம் தொடருந்து நிலையம் வரை சென்றது. அங்கு சிறிது நேரம் தொடருந்துப் பாதையின் குறுக்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் மீண்டும் வீதிக் கடவைக்குச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்ட இடத்திற்கு வந்த மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலைய அதிகாரிகள், ஊழியர்களுடன் பேச்சு நடத்தினர். இவர்களது கோரிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா ஆதரவு

## ஜூலி சங் ருவிட்



இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதரகத்தின் முதலாவது அவுருது பொல - புத்தாண்டு சந்திப்பை விளம்பரப்படுத்தும் முகமாக வெளியிட்ட ருவிட்டர் பதிவில் ஜூலி சங் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் -

இந்த புத்தாண்டு சந்தை, உள்ளூர் மற்றும் பெண்களுக்குச் சொந்தமான வணிகங்கள் உட்பட 40 விற்பனையாளர்களுக்கு தங்கள் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குகிறது.

இந்த நிலையில் உள்ளூர் வணிகங்களுக்கான வாய்ப்புகளை எளிதாக்குவது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் ஒரு வழியாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்திய – இலங்கை கடற்படை 10ஆவது இருதரப்பு பயிற்சி



இந்திய – இலங்கை கடற்படையினருக்கிடையிலான பத்தாவது வருடாந்த கடல்சார் இருதரப்பு பயிற்சிகள் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாகி 8 ஆம் திகதி வரை கொழும்பில் இரு கட்டங்களாக நடைபெறுகின்றது. இதில் முதற்கட்டமாக 3 ஆம் திகதி முதல் செவ்வாய்க்கிழமை வரையில் துறைமுக மட்டத்திலான பயிற்சிகள் கொழும்பிலும் நேற்று (புதன்கிழமை) முதல் 8 ஆம் திகதி வரையில் கொழும்புக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் கடல்சார் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

இந்தியக் கடற்படை ஐ.என்.எஸ். கில்தான் (அதிநவீன நீர்மூழ்கி எதிர்ப்பு கடற்படைக் கப்பல்) மற்றும் ஐ.என்.எஸ். சாவித்ரி (ரோந்துக் கப்பல்) ஆகிய கடற்படை கப்பல்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அதேநேரம் இலங்கை கடற்படை எஸ்.எல்.என்.எஸ். கஜபாகு (அதிநவீன ரோந்துக் கப்பல்) மற்றும் எஸ்.எல்.என்.எஸ். சாகரா ஆகியவற்றால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக இந்திய கடற்படையின் செத்தக் ஹெலிகொப்டர் மற்றும் கடல் ரோந்து பணிகளுக்கான டோனியர் விமானமும் இலங்கை கடற்படையின் டோனியர் விமானம் மற்றும் பெல் 412 ரக ஹெலிகாப்டர் ஆகியவையும் இச்தப் பயிற்சியில் கலந்துகொள்கின்றன. இரு கடற்படையினரதும் விசேட படைகளும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன. இதற்கு முன்னதான இந்தப் பயிற்சி கடந்த ஆண்டு மார்ச் 7 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை விசாகபட்டினத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருநாடுகளினதும் கடற்படையினரின் இயங்குதிறன் மேம்பாடு, பரஸ்பர புரிந்துணர்வைமேம்படுத்துதல், கடல் மார்க்கமானபன்முக செயற்பாடுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் சிறந்த செயல்முறைகளைப் பரிமாறுதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இவ்வாண்டுக்கான பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

துறைமுக மட்டத்தில் நடைபெறும் பயிற்சிகளில் விளையாட்டுகள், யோகா பயிற்சிகள் மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் இதன் மூலமாக தோழமை மற்றும் நட்புறவின் பிணைப்பைக் கட்டி எழுப்புவதற்கும் பரஸ்பரம் துறைசார்ந்த விடயங்களைக் கற்றுக்கொள்வதற்கும், அதே போல பொதுவான பெறுமானங்களைப் பகிர்ந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகின்றன.

கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் ஆகியோர் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற பயிற்சிகளின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். ஆயுதப் படைகளின் மீதான ஆர்வத்தையும் அதேநேரம் ஆயுதப் படைகள் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான விருந்தினர்கள் குறித்த இந்திய கடற்படை கப்பல்களை பார்வையிடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்திய மற்றும் இலங்கை கடற்படையினரின் இசைக்குழுவினர் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்துடன் இணைந்து நடத்தும் விசேட இசை நிகழ்வு கொழும்பிலுள்ள டச்சு மருத்துவமனை வளாகம் மற்றும் விகாரமாதேவி பூங்கா ஆகிய இடங்களில் முறையே ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. துறைமுக அடிப்படையிலான செயற்பாடுகள், கலந்துரையாடல்கள் இந்தப் பயிற்சியில் உள்வாங்கப்பட்டுள்ளன.

கடல் மார்க்கமான பயிற்சிகளில் கரை மற்றும் வான் எதிர்ப்பு தாக்குதல் பயிற்சிகள், கப்பலோட்டல் பயிற்சிகள், ஹெலிகாப்டர் மற்றும் கடல்சார் ரோந்து விமானங்களின் செயற்பாடுகள், அதிநவீன நுட்பங்கள், தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், விசேட படையினரின் கடல் மார்க்கமான நடவடிக்கைகள் உள்ளிட்டவை கடல் மார்க்கமான பயிற்சிகளில் உள்வாங்கப்பட்டிருப்பதுடன் இதன் மூலமாக நட்புறவைக் கொண்ட இவ்விரு கடற்கரையினரிடையிலும் ஏற்கனவே காணப்படும் இயங்குதிறனை மேலும் மேம்படுத்துவ தற்கு சந்தர்ப்பம் கிடைக்குமென்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கடல் மார்க்கமாக மிகவும் வலுவான பரஸ்பர ஒத்துழைப்பைக் கொண்டிருக்கும் இந்தியா மற் றும் இலங்கைக்கிடையிலான ஆழமான ஈடுபாட்டை இந்தப் பயிற்சிகள் மேலும் விஸ்தரிப்பதாக அமைகின்றன. மேலும் இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் பிரதமரின் பிராந்தியத்தில் அனைவருக் கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற சாகர் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய இலங்கை கடற்படை இடையிலான தொடர்புகள் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வெளிநாடுகளின் உதவியுடன் தமிழர் உரிமை பெறவேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தல்

அரசாங்கம் பொருளாதார ரீதியில் பலவீனமடைந்துள்ள சூழ்நிலையில் வெளிநாடுகளின் உதவியுடன் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைவது தொடர்பில் ஈபி.ஆர்.எல்.எப் மத்திய குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஈ. பி.ஆர்.எல்.எப் கட்சியின் மத்தியக்குழு கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் சுரேஷ்பிரேமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கட்சியின் தீர்மானங்கள் தொடர்பில் அவர் தெரிவிக்கையில் –

ஜனநாயக அமைப்புக்கள் அனைத்தும் இன்று முடக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என கூறினாலும் கூட இதுவரை அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுத்ததாகத் தெரியவில்லை.

இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி மிகத் தெளிவாகக் கூறியுள்ளது.

தமிழ் மக்கள் சார்பாகவும் பல கட்சிகளும் எவ்வாறு 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டதோ அதில் உள்ள அனைத்து விடயங்களையும் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரியிருக்கின்றார்கள்.

அத்துடன் ஈ.பி.ஆர்.எல். எப் மத்திய குழுவிலும் 13 ஆவது திருத்த சட்டத்தை



முழுமையாக மிக விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானத்தையும் எடுத்துள்ளோம். குறைந்த பட் சம் வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலையாவது அரசாங்கம் உடன் நடாத்த வேண்டும் எனவும் கோருவதாக அந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம். அடுத்ததாக வெடுக்குநாறிமலை, குறுந்தூர் மலை, கன்னியா வென்னீர் ஊற்றுப்பகுதிகளான தமிழ் மக்களின் புராதன சின்னங்கள் இன்று பறிக்கப்பட்டுள்ளதுடன் வெடுக்குநாறி மலையில் உள்ள விக்கிரகங்கள் உடைத்து எறியப்பட்டுள்ளதுடன் குருந்தூர் மலையில் புத்த விகாரை கட்டப்பட்டுள்ளது.

கன்னியா, தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மட்டக்களப்பில் உள்ள தமிழ் மக்களுக்கான மேய்ச்சல் தரையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இவை அனைத்தும் அரசாங்கத்தால் உடனடியாக நிறுத்தப்பட்டு இவை அனைத்தும் இந்து தமிழ் மக்களின் புராதன இடங்கள் அந்த மக்கள் தொடர்ந்தும் வழிபடக்கூடியவாறாக உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கம் இதனை தொல்பொருள் பகுதியாக எடுக்குமாக இருந்தால் அதனை புராதன சின்னமாகப் பாதுகாக்க வேண்டுமே தவிர அங்கு புத்த விகாரைகள் வருவதோ சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதோ ஏற்புடையதல்ல.

அரசாங்கம் இந்த விடயங்களில் கவனம் செலுத்தி மீண்டும் தமிழ் மக்களிடம் இந்தஸ்தாபனங்கள் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கம் வெளிநாடுகளுக்கும் தூதுவராலயங்களுக்கும் தாம் நல்லிணக்க செயற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றோம் எனக் கூறும் அதேவேளை, நல்லிணக்கத்துக்கு எதிரான வகையில் இலங்கை அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அது தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடாகவே இருக்கின்றது எனவும் மத்தியகுழுவில் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே அரசாங்கம் வெளிநாடுகளுக்கு ஒரு கதையையும் உள்நாட்டில் வேறு விதமாக செயற்படுவதையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு கண்டிப்பதோடு வெடுக்குநாறி, குருந்தூர்மலை, கன்னியா வென்னீர் ஊற்று அனைத்தும் தமிழ் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி விரும்பினால் ஓர் இரவிலேயே அனைத்தையும் நடைமுறைக்கு கொண்டுவர முடியும். ஆகவே நாள்களைக் கடத்தாமல் ஜனாதிபதி அதற்கான முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் அதனை எவ்வாறு மேலும் தீவிரமாக முன்னெடுத்து சென்று அனைவரதும் ஒத்துழைப்புடன் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க கூடிய ஸ்தாபனமாக மாற்றுவது தொடர்பாகவும் கருத்துப்பரிமாற்றங்கள் மத்தியகுழுவில் இடம்பெற்றன.

இலங்கை அரசாங்கம் பொருளாதார ரீதியில் பலவீனமடைந்துள்ள சூழ்நிலையில் நாம் வெளிநாடுகளின் உதவியுடன் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அனைவரும் ஒன்றிணைந்து இந்த விடயங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# இலங்கை பொருளாதாரம் 2023இல் வீழ்ச்சிக்கு பின்னரே வளர்ச்சிப் பாதை நோக்கிச் செல்லும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி கணிப்பு

இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் வீழ்ச்சியடைந்த பின்னரே மீண்டும் 2024 இல் வளர்ச்சி பாதையைநோக்கி செல்லும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

2022 இல் 7 வீதமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்ட இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் மூன்று வீதத்தால் வீழ்ச்சியடையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்வுகூறியுள்ளது.

இலங்கை மீட்சிக்காக நீண்டபாதையில் பயணிக்கவேண்டும். வறியவர்களும் நலிந்தவர்களும் பாதுகாக்கப்படுவது அவசியம் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதி இயக்குநர் உட்சவ் குமார் தெரிவித்துள்ளார்.

# இரத்தினபுரியில் 'தேயிலை சாயம்' புகைப்படக் கண்காட்சி நிகழ்வு

இரத்தினபுரி கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் இரத்தினபுரி லெல்லோபிட்டிய சில்வரே உல்லாச உணவகத்தில் 'தேயிலை சாயம்' என்ற தலைப்பில் புகைப்படக்கண்காட்சி 05 ஆம் திகதி தொடக்கம் 07 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. நாட்டில் பல பாகங்களிலும் நடைபெற்ற இந்தக் கண்காட்சி முதன் முறையாக இரத்தினபுரி மாவட்டத்தில் தற்போது நடைபெறுகின்றது.

ஊவா சக்தி நிறுவனம், எஸ்.ஆர்.பி. நிறுவனம், மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம், ஜீ.ஐ.இசட். நிறுவனம் பிரிட்டிஸ் கவுன்ஸில், ஜேர்மன் கோப்பரேசன் உள்ளிட்ட பல நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடைபெறும் புகைப்படக் கண்காட்சியில் மலையக மக்களின் தினசரி வாழ்க்கை, அவர்களின் தொழில், அவர்களின் குழந்தைகளின் கல்வி முறை தொடர்பான பல விடயங்களை தெட்டத் தெளிவாக வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டுள் ளன.

இந்த கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வை உத்தியோகப்பூர்வ







மாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இரத்தினபுரி கலாகூடத்தின் சார்பாக அதன் நிறைவேற்றதிகாரி நந்தலால் விக்கிரமசூரிய கூறியவை வருமாறு –

இரத்தினபுரி மாவட்டம் இன வன்முறைக்கு பெயர் பெற்ற மாவட்டமாகும். கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும் தாக்கப்பட்டனர். குறிப்பாக 30 வருட யுத்தம் நடைபெற்ற போது அதற்கு பிரதான காரணம் தோட்டத் தமிழ் மக்கள் தான் எனக்கூறி இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அப்பாவி தோட்ட மக்கள் பெரும்பான்மையின மக்களால் தாக்கப்பட்டனர். அவர்களது உடைமைகளும் தாக்குதலுக்குள்ளானது. இனிவரும் காலங்களில் இவ்வாறு இடம்பெறக்கூடாது என்பதற்காக இம்மாவட்டத்தில் இப்புகைப்படக்கண்காட்சி நடத்தப்படுகின்றது. இந்தக் கண்காட்சி நான்கு தரப்பினருக்குக் காண்பிக்கப்பட வேண்டும் என்பது எமது ஆசை ஆகும்.

முதலாவது தரப்பினர் –

சிங்கள மொழி மூல பாடசாலை மாணவர்களுக்கு 200 வருடங்களுக்கு முன் இலங்கை வந்த பெருந்தோட்ட மக்கள் பட்ட, படுகின்ற கஷ்டங்களை அவர்கள் புரிந்து கொள்வதுடன் தோட்ட மலையக மக்கள் இன வன்செயலில் அல்லது இன ரீதியாக பாதிக்கப்பட்டால் அதற்கெதிராக தென்பகுதியிலுள்ள பெரும்பான்மையின மாணவர்கள் குரல் கொடுப்பதுடன் அதனைத் தடுக்க முன் வருவதுடன் அவர்களும் (மலையக மக்களும்) இந்நாட்டில் பிறந்து வளர்ந்து வருபவர்கள் அவர்களும் பெரும்பான்மையின மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் சலுகைகளும் முழுமையாக அனுபவிக்க வேண்டும். அதற்கு பெரும்பான்மையின மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதற்காகவும்,

இரண்டாவதாக தென்பகுதியிலுள்ள பெரும்பான்மையின மக்களுக்கு–

அதாவது மலையக மக்கள் அன்றாடம் தேயிலை தோட்டத்தில் அளவிட முடியாத இன்னல்களை அனுபவிக்கின்றனர். அவர்கள் தேயிலை மலைகளில் தேயிலை பறிக்க படும்பாடு சொல்லில் அடங்காது அதனால் அதனை புகைப்படம் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு அல்லல்பட்டு பறிக்கும் தேயிலை கொழுந்தை தூளாக்கி அதனை ஏற்றுமதி செய்து அதன் ஊடாக வெளிநாட்டிலிருந்து பெற்ற அந்நிய செலாவணி (டொலர்) மூலம் இலங்கையில் இலவசமாக கல்வி கற்று வெளிநாட்டில் பணிபுரிய படையெடுக்கும் புத்திஜீவிகளுக்கு உணர்த்தும் பொருட்டும்.

மூன்றாவதாக மலையக பாடசாலையில் கல்வி கற்கும் குறிப்பாக இரத்தினபுரி மாவட்ட தமிழ் மாணவர்களுக்கு –

கடந்த 200 வருடங்களாக உங்களது பாட்டன் தொடக்கம் இன்று வரை மலையகம் மறுமலர்ச்சியடையவில்லை. அதனை மறுசீரமைக்க உங்களால் முடியும். அதற்கு சிறந்த கல்வியை பெற வேண்டுமென்பதை உங்களுக்கு உணர்த்துவதற்காகவும் –

நான்காவதாக மலையகத்தில் வாழும் பெரியோர்கள் மற்றும் மலையக பெற்றோர்களுக்கு –

200 வருடகால மலையகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன ஆனால் ஒன்று மட்டும் இன்று வரை மாறவில்லை. அதாவது மலையக மக்ககளில் சிலர் மட்டும் குடிபோதையிலிருந்து இன்று வரை மீளவில்லை. எதற்காக மது அருந்த வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். மதுவால் மலையகம் அழிந்து வருகின்றது. அதிலிருந்து மீண்டு குடிபோதைக்கு செலவிடும் பணத்தை தமது பிள்ளைகளின் கல்விக்காக செலவிட வேண்டும்; என்பதற்காகவும் நாமும் நமது மூத்தவரும் பட்ட படுகின்ற கஷ்டங்களை நமக்கு தெரிய வேண்டும் என்பதற்காகவும் இந் தப் புகைப்படக் கண்காட்சி நடாத்தப்படுகின்றது. இந்தப் புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டு வெளியே செல்லும் ஒவ்வொருவருக் கும் தன்னில் மாற்றம் ஏற்படும். அவ்வாறு மாற்றமடையாது விட்டால் அவர் மனித குலத்துக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும். – என்றார். இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல வர்த்தகரும் தேயிலை உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளருமான சமன் உபசேன , சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி சரத் விஜயகுணவர்தன, இரத்தினபுரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கோபால் தம்பிராஜ் உள்ளிட்ட பெருந்திரளான தமிழ், சிங்கள மாணவர்களும் கலந்து கொண்டனர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் மீண்டும் அடிவாங்கும் மக்கள்

**பங்குனி மாத இறுதியில் திடீரென எரிபொருள் விலைகளில் கணிசமான குறைப்பு அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சமையல் எரிவாயுவின் விலையும் குறைக்கப்பட்டது. கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கு விலைக் குறைப்பு அது. இந்த விலைக் குறைப்புக்கள் காரணமாக சந்தையில் மேலும் பல பொருட்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன. உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன. கடந்த வாரத்தில் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கூட சதொச விற்பனை நிலையம் குறைத்தது. இவை நல்ல செய்திகளாக இருக்கலாம்.**

**இருந்தாலும் இந்த விலைக்குறைப்புக்களால் பண வீக்கம் உடனடியாக வீழ்ச்சியடைவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியிருக்கிறது. ஆனாலும் விலைக் குறைப்பு நாட்டின் பொருளாதாரம் மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டுவதாகக் கூறப்படுகிறது, பொருளாதார மீட்சியினால் மட்டும் இந்த விலைக்குறைப்பு இடம்பெறவில்லை என்பதே உண்மை. அரசியல் மற்றும் பன்னாட்டுச் சந்தை நிலவரம் என்று வேறு சில காரணங்களாலும் இந்த விலைக் குறைப்பு நடந்திருக்கிறது.**

**அதுவும் இந்த விலைக் குறைப்பினால் கொஞ்சமாவது நன்மையடையக்கூடியவர்கள் நடுத்தர வர்க்கத்தினரே. வறுமையோடு நாளாந்தம் போராடும் மக்களுக்கு இந்த விலைக் குறைப்பு மகிழ்ச்சியளிக்கக்கூடியவையல்ல. இன்னும் சொல்லப் போனால் இந்தப் பொருளாதார நெருக்கடி காரணமாக கீழ் மத்திய தரத்திலிருந்து வறுமைக்குள் வீழ்ந்த மக்களுக்கும்கூட இந்த விலை வீழ்ச்சியினால் மகிழ்ச்சி உண்டாகப் போவதில்லை. அதுவும் பண்டிகைக் காலத்தில் அவர்கள் துன்பம் இன்னும் அதிகரிக்கவே போகின்றது.**

**அத்தகைய தரப்பினர் மீது அதிக அக்கறை, கரிசனை காட்டப்படவேண்டும் என்று பன்னாட்டு அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. அரசு இந்தத் தரப்பினருக்கு 20 கிலோ அரிசியை இலவசமாக அண்மையில் வழங்கியது. ஆனால், அது எத்தனை நாட்களுக்குப் போதுமானது? அல்லது ஒரு குடும்பம் வாழ்வதற்கு இலவச அரிசி மட்டுமே போதுமானதா?**

**இந்த நிலையில் இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி வீதம் 4.3 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் என்றுவேறு உலக வங்கி அறிவித்துள்ளது. இது இன்னும் வேலையின்மைமையயும் பண வீக்கத்தையும் அதிகப்படுத்தும். அதன் தாக்கத்தையும் சுமக்கவேண்டியவர்களாக வறிய மக்களே இருக்கப் போகிறார்கள்.**

**ஆட்சியாளர்களின் அனைத்துத் தவறுகளுக்குமான தண்டனையை அப்பாவி மக்கள் அனுபவிப்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல என்றாலும் அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. அதுபற்றி அக்கறை கொள்ளவேண்டிய ஆட்சியாளர்கள் தங்கள் அரசியல் வெற்றிகளுக்கான இலக்குகளில் கவனமாக இருக்க எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் அடிபட்டுக்கொண்டு ஆட்சியாளர்களை எதிர்க்கும் ஒற்றைப் புள்ளியில் இருந்த விலகித் தனிதனியே நிற்பது ஆட்சியாளர்களுக்கு இன்னும் வசதியாக இருக்கின்றது. இந்த நிலையில் மாற்றம் வராமல் அப்பாவி மக்களை காப்பாறப்போவது யாரோ?**

# பெரமுனவைப் பலவீனப்படுத்த கட்சிக்குள்ளே சூழ்ச்சிகளாம்

### அதன் செயலாளர் சாகர கூறுகிறார்




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பலவீனப் படுத்த கட்சிக்குள்ளே சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கட்சியை மறுசீரமைக்க ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் தொடர்ந்து செயற்படுவோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில்

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார்களே தவிர நாட்டுக்கு தீங்கிழைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எம் மத்தியிலும் விமர்சனங்கள் உள்ளன. கடந்த அரசாங்கத்தை பலவீனப்படுத்தியவர்கள் தற்போது தூய்மையானவர்கள் போல் அரசியல் செய்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் கடுமையான நிபந்தனைகளை கட்டாயம் செயற்படுத்த வேண்டும் என்பதால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எமது அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவில்லை.

நாணய நிதியத்தை நாடினால் அரசாங்கத்தில் இருந்து விலகுவோம் என்று அரசாங்கத்துக்குள் கடுமையாக எதிர்ப்புக்கள் எழுந்தன.

சர்வதேச நாணய நிதியத்தை நாடாமல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கக் கூடிய அவதானம் செலுத்தினோம். தேசிய வளங்களை ஒப்பந்த அடிப் படையில் தனியார் மயப்படுத்தும் முயற்சிக்கு அரசாங்கத்துக்குள் கடுமையான எதிர்ப்புகள் எழுந்தன.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் சகல திட்டங்களுக்கும் ஆளும் தரப்பினரே எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

பொருளாதார பாதிப்பு தீவிரமடையும்போது ராஜபக்சர்களை மாத்திரம் குற்றவாளியாக்கிவிட்டு ஒரு தரப்பினர் அரசாங்கத்தில் இருந்து விலகி தற்போது ஒன்றும் அறியாததை போல் கருத்துரைக்கிறார்கள். நாட்டு மக்கள் இவர்களுக்கு நிச்சயம் பாடம் புகட்டுவார்கள்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப் படுத்தியதை போன்று தற்போது பொதுஜன பெரமுன கட்சியை பலவீனப்படுத்த கட்சிக்குள் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அனைத்து சவால்களையும் நிச்சயம் முறியடிப்போம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்துள்ளோம்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் இதுவரை கட்சி கூட்டத்தில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. கட்சியை மறுசீரமைக்க ஆரம்பகட்ட நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் தொடர்ந்து செயற்படுவோம். – என்றார்.

# சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் ஊழலற்ற நாட்டை உருவாக்க முடியாது

### நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்



உண்மையைக் கண்டறிய நியமிக்கப்பட இருக்கும் ஆணைக்குழு மூலம் 1983 ஜுலை மாதத்தில் இருந்து இந்த நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களை தேடிப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் ஊழல் இல்லாத நாட்டை உருவாக்க முடியாது என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊழலுக்கு எதிராக நிலைபேறான வழியில் பயனிக்க இலங்கையால் முடியுமா? மும்மொழியப்பட்டுள்ள சட்ட–மூலம் இதற்கு உறுதுணையாக அமையுமா? எனும் தலைப்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் இலங்கை மன்ற கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் மன்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடாளுமன்றம், நீதிமன் றம் மற்றும் நிறைவேற்றுத்துறை என இவை அனைத்தும் ஒன்றிணைந்து ஊழலை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும் சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் ஊழல் இல்லாத நாட்டை உருவாக்க முடியாது.

அரசமைப்பின் 21ஆம் திருத்தம் அதேபோன்று புதிய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் நாட்டின் எதிர்கால திசையை தீர்மானிக்கும் புதிய சட்டமாக அறிமுகப்படுத்தலாம்.

அத்துடன் புதிய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் ஊடாகத் தேவையான எந்த சந்தர்ப்பத்திலும் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக் கொள்ள முடியுமாகிறது.

சட்டமா அதிபர் ஆலோசனை மற்றும் சட்ட உதவி பெற்றுக்கொடுப்பதற்கும் தேவை யான அதிகாரம் சட்டமா அதிபருக்கு வழங்கி இருக் கிறது.

தற்போது செயற்படும் இலஞ்ச ஆணைக்குழு, ஆணையாளர்களாக நியமிக்கப் படுபவர்கள் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளாவர்.

அந்த முறையை மாற்றி செயற்திறமையுடன் பொறுபுக்கூறக்கூடிய இலஞ்ச ஆணைக்குழு சபை ஒன்றை அமைக்கும் நோக்கில் தகுதி வாய்ந்த சேவையில் இருக்கும் அரச அதிகாரிகள் மற்றும் சிவில் பிரதிநிதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் சுயாதீனம் எனத் தெரிவிப்பதன் மூலம் மாத்திரம் தேவையற்ற சுதந்திரத்தை ஆணைக்குழுக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாது.

புதிய இலஞ்ச ஆணைக் குழு மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளது. இந்த நாட்டுக்குள் சட்டம் அமைப்பது இலகுவான விடயமல்ல.

தற்போது இருக்கும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அமைக்கப்பட்டு முதல் 5 வருடங்களுக் குள் ஒரே ஒரு வழக்கு மாத்திரம் தொடுக்கப்பட்டிருந்ததன் மூலம் இந்த ஆணைக்குழுவின் பலவீனம் தெளிவாகின்றது.

மேலும் உண்மையைக் கண்டறிய நியமிக்கப்பட இருக்கும் ஆணைக்குழு மூலம் 1983 ஜுலை மாதத்தில் இருந்து இந்த நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களைத் தேடிப்பார்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அதற்கு தேவையான அமைச்சரவை பத்திரம் நீதி அமைச்சர் என்றவகையில் நானும் வெளிவிவகார அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்தோம். அதற்கான அனுமதி கிடைத்துள்ளது. – என்றார்.

# தென்கொரியாவில் இலங்கை இளைஞர்களுக்கு அதிக தொழில் வாய்ப்புக்களை வழங்க முடிவு

### அஜித் ராஜபக்ஷவிடம் அந்நாட்டு நிறுவனம் தெரிவிப்பு



இலங்கை இளைஞர்களுக்கு தென்கொரியாவில் அதிக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க எதிர்பார்த்திருப்பதாக தென்கொரியாவின் புகழ்பெற்ற நிறுவனமான 'ஹூண்டாய்' நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷவிடம் தெரிவித்தனர்.

தென்கொரிய வேலைவாய்ப்புக்களுக்காக இலங்கை இளைஞர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள், அது தொடர்பான பயிற்சிகள் உள்ளிட்ட பணிகளை ஆராய்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள ஹூண்டாய் கப்பல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர், பிரதி சபாநாயகர் அஜித் ராஜபனடசவை நாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போது இதனைத் தெரிவித்தனர்.

இலங்கை இளைஞர்கள் உயர்ந்த திறமையைக் கொண்டவர்கள். பயிற்சி பெற்ற இலங்கை இளைஞர்களை அதிகமாக தென்கொரியாவிற்கு அழைத்துக் கொள்ள எதிர்பார்ப்பதாக பிரதிநிதிகள் குழு சுட்டிக்காட்டினர்.

இந்தத் தொழிலாளர்கள் நல்ல பண்புகளுடன் ஒழுக்கமான இளைஞர்களாக இருப்பது முக்கியம் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

அரசாங்கம் தலையிட்டு இந்நாட்டில் முறையான தொழிற்பயிற்சிகளை வழங்குவதுடன் பயிற்சி பெற்ற தொழிலாளர்களைத் தாமதமின்றி தென்கொரியாவிற்கு விரைவில் அனுப்ப வேண்டியதன் அவசியத்தை அவர்கள் சுட்டிக் காட்டினர். இந்நாட்டு தொழிலாளர்களுக்கான வசதிகளும் பாதுகாப்பும் அதிகபட்சமாக வழங்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

கப்பல் கட்டுமானம் மற்றும் பழுது பார்ப்பு, இலத்திரனியல் மற்றும் வெல்டிங் போன்ற துறைகளில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு அதிக தேவை இருப்பதாகவும் அதிக சம்பளம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் என்றும் பிரதிநிதிகள் குழு சுட்டிக்காட்டியது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச குறிப்பிடுகையில் இலங்கையில் திறமையான தொழிலாளர்களுக்கான முழுமையான வசதிகளுடன் கூடிய பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொழில் திறன் மட்டுமின்றி, கொரிய மொழி, கலாசாரம் போன்றவற்றையும் இதன் மூலம் புரிந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் தமது விருப்பத்தைத் தெரிவித்த இந்தக் குழுவினர், இந்நாட்டிலுள்ள திறமையான இளைஞர்களுக்குத் தென்கொரியாவில் மேன்மேலும் பல வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டனர்.

# ஒழுக்கவியல், சிறப்புரிமைகள் குழுவிற்கு சட்டக் கல்லூரி அதிபரை அழையுங்கள்

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை

சட்டக்கல்லூரி மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி உரிமை தொடர்பில் நாடாளுமன்றம் எடுத்த தீர்மானம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

நாடாளுமன்றதின் தீர்மானங்களைப் புறக்கணித்து ஒருதரப்பினர் சட்டவாக்கத் துறைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுகிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது, ஆகவே, சட்டக் கல்லூரியின் அதிபரை நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவிற்கு அழையுங்கள் என எதிர்க்கட்சி உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, ஜயந்த சமவீர ஆகியோர் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்கள்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதை கட்டாயமாக்கும் வகையில் கடந்த 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி தோற்கடிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானம் நிதியமைச்சுக்கு நாடாளுமன்ற அதிகாரிகளால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நீதியமைச்சின் செயலாளர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. சட்ட ஆய்வு கவுன்சில் இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படவில்லை.

சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு தற்போது புத்தாண்டு கால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது, எதிர்வரும் 24 ஆம் திகதி சட்டக் கல்லூரி பரீட்சை இடம்பெறவுள்ளது.

ஆகவே, நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய தமது தாய் மொழியில் பரீட்சைக்கு தோற்றும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தின் தீர்மானத்தைப் புறக்கணித்து ஒரு தரப்பினர் சட்டவாக்கத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுகிறார்கள், ஆகவே, இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றம் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும், இல்லாவிடின் சமூக கட்டமைப்பில் மீண்டும் அமைதியற்ற தன்மை நிலவும். – என்றார்.

இதன்போது எழுந்து ஒழுங்கு பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சியின் உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்தாமல் செயற்படுவது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறலாகக் கருதப்படும். ஆகவே சட்டக்கல்லூரி அதிபரை நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவிற்கு உடன் அழையுங்கள் என சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஜயந்த சமரவீர, நாடாளுமன்றத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை பொறுப்பானதரப்பினர் செயற்படுத்தாமல் இருக்கின்றமை நாடாளுமன்றத்தை அவமதிப்பதாகக் கருதப்படும். ஆகவே பொறுப்பான தரப்பினரை நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவிற்கு அழையுங்கள். – என்றார்.

# குடாக்கடல் நீரேரி பகுதியிலுள்ள கடலட்டை பண்ணைகள் உடன் அகற்றப்படல்வேண்டும்!

## அருட்தந்தை யூஜின் வலியுறுத்து

குடாக்கடல் நீரேரிப் பகுதியிலுள்ள கடல்அட்டைப்பண்ணைகள் அகற்றப்பட வேண்டும் இந்தக் கடல் அட்டைப் பண்ணைகளால் கடல் வளங்கள் சூறையாடப்படுவதுடன் கடல் வாழ் உயிரினங்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய திணைக்களங்கள் இது தொடர்பில் அக்கறை எடுத்து இதனை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை யூஜின் பிரான்ஸிஸ் அடிகளார் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தொடர்பான திணைக்கள அதிகாரிகளுக்கும் கிராம குழுக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ். கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; -

சுற்றுச்சூழல தொடர்பில் தற்போது அதிகளவாகக் கதைத்து வருகின்றோம். ஆனால்எம் கண்முன்னே குறிப்பாக குடாக்கடல்நீரேரிப்பகுதியில் கடல் அட்டைப் பண்ணைகள் ஒழுங்கற்ற முறையில் அமைக்கப்பட்டு கடலின் வளங்கள் வெளிநாட்டினரால் சூறையாடப்படுகின்றது. அது மட்டுமன்றி கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. பருவ காலத்தில் இந்தக் கடற்கரையைத் தேடிவருகின்ற மீனினங்கள் உற்பத்திக்காக இப்பகுதிகளுக்கு வராத நிலைகாணப்படுகின்றது. இந்த நிலை தொடருமாயின் குடாக்கடலை நம்பிவாழும்தொழிலாளர்கள் தமதுதொழிலைமுற்றுமுழுதாகஇழக்கநேரிடும். கடல் அட்டைப் பண்ணைகளால் இலாபம் வரும் என்பதற்காக குடாக்கடலைநம்பியுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு யார் உதவி செய்வது? கடல் அட்டையை இலங்கையில் எவருமே பயன்படுத்துவதில்லை.

அவ்வாறுள்ள நிலையில் வெளிநாட்டின் இலாபத்துக்காக இந்தத் தொழில் முறையைச் செய்து இலாபம் ஈட்டுவது யார்? இலாபத்தை ஈட்டுவதாயின் அதற்கான தொழிலாளர்கள் பங்கு பற்றுதல் முக்கியமானது. எனவே, பழக்கம் இல்லாத சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற தொழில் முறையைத் தவிர்த்து சூழலுக்கு ஏற்ற தொழில் முறையைச் செய்வதற்கு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் மற்றும்கரையோரம்பேணல் மூலவளத்திணைக்களம் மற்றும் சுற்றுச்சூழல் திணைக்களங்கள் இதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். - என்றார்.

# விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட ஆசிரியர், பேராசிரியர்கள் இணக்கமாம்

## கல்வி அமைச்சர் சுசில் கூறுகிறார்



கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளை விரைவாக முடித்துக்கொண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சையை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட ஆசிரியர்கள், பேராசிரியர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சுயாதீன எதிர்தரப்பு உறுப்பினர் ஜயந்த சமரவீர எழுப்பிய கேள்வி பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப் பிட்டவை வருமாறு – விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையா ளர் இணக்கப்பாடு தெரிவித்துள்ளார்கள். பெற்றோல் விநியோகத்துக்கு இராணுவத்தினரை இணைத்துக் கொள்வதை போன்று விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு பிற தரப்பினரை இணைத்துக் கொள்ள வேண்டும், ஆகவே பேச்சு ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

ஆசிரியர் சங்கத்துடன் பேச்சு நடத்தப்பட்டு அதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக பேராசிரியர் கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு அவர்களுக்கு உச்ச அளவு கொடுப்பனவை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் இரண்டொரு தினங்களில் அவர்கள் அதற்கான முடிவை தொழிற்சங்கத்தினர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்கள். பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற் றும் பேராசிரியர்களுக்கு இம்முறை அதிகரித்த கொடுப்பனவுகளை வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து மேலதிகமாக 42 கோடியே 50 லட்சம் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பேராசிரியர்கள் வரி அதிகரிப்பு தொடர்பில் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கும் கல்வி அமைச்சுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அது நிதியமைச்சோடு சம்பந்தப்பட்டது. அவர்கள் அதற்கான வேண்டுகோளை நிதியமைச்சிடம் முன்வைத்து தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறெனினும் விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளுக்கு அவர்களில் 80 வீதமானவர்கள் இதுவரை இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பேச்சு வெற்றிகரமாக நிறைவடைந்தது, இன்னும் இரண்டொரு தினங்களில் அவர்கள் அது தொடர்பான முடிவை அறிவிப்பார்கள். அந்த வகையில் விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு விரைவாக க.பொ.த சாதாரண தர பரீட் சையை நடத்து–வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# மதத்தலைவர்களுக்கு அமைச்சு பாதுகாப்பு எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது?

## ஹக்கீம், மஹ்ரூப் சபையில் கேள்வி

திருகோணமலை அரிசிமலை பொன்மலைகுடா பிரதேசத்துக்கு சென்ற மதத்தலைவர்களுக்கு அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டனர் என ரவூப் ஹக்கீம், இம்ரான் மஹ்ரூப் சபையில் கேட்ட கேள்விக்கு சபையில் முறையான பதில் வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் இடையிட்டு கேள்வியொன்றை முன்வைத்து குறிப்பிடுகையில் –

திருகோணமலை அரிசிமலை பொன்மலைகுடா பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன்னர் பௌத்த பிக்கு ஒருவரால் பௌத்த சிலை வைக்க முற்பட்டபோது ஏற்பட்ட சம்பவம் தற்போது சமூக வலைத்தலங்களில் வைரலாகி வருகிறது.

குறித்த மதகுருவுக்கு அமைச்சு பாதுகாப்பு அதிகாரி வழங்கப்பட்டிருப்பதும் அவர்கள் அங்கு எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பொது மக்களுக்கு துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தும் நிலைமை சிலைவைப்பதை தடுத்த மக்களின் நிலைமையும் கேள்விக்குறியாகி இருக்கிறது.

அதேபோன்று தொல்பொருள் நடவடிக்கையின் போது எமது பிரதேசத்தில் காலாகாலமாக வாழ்ந்துவந்தவர்களின் வீடுகள், அவர்களின் விவசாய பூமிகள் அபகரிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன? இதற்கு பௌத்த விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பதிலளிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதுதொடர்பாக தேடிப்பார்த்து உங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறேன்.

அத்துடன் தொல்பொருள் நடவடிக்கையின் போது ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால் அதுதொடர்பில் தகவல் வழங்கினால் நடவடிக்கை எடுப்பேன். – என்றார்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குறுக்கிட்டு, ருகோணமலை அரிசிமலை பொன்மலைகுடா பிரதேசத்துக்கு சில மதத்தலைவர்கள் அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளுடன் சென்றிருக்கின்றனர்.

இதன்போது அந்த பிரதேசத்தில் எதிர்ப்பு தெரிவித்த மக்களை நோக்கி துப்பாகி நீட்டி அச்சுறுத்தி இருக்கின்றனர். அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் எந்த அடிப்படையில் மதத்தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க அந்த இடத்துக்கு சென்றார்கள் என்பது தொடர்பில் நீங்கள் தேடிப்பார்ப்பீர்களா? எமக்கு அறிக்கை சமர்ப்பிப்பீர்களா ? என கேட்டார். அதற்கு அமைச்சர் அமைச்சு பாதுகாப்பு பிரிவு பௌத்த கலாசார அமைச்சுக்கு உட்பட்டது அல்ல. அந்த கேள்வியை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் முன்வையுங்கள். – என்றார்.

# ஊடகவியலாளர்களை முடக்கும் கொள்கைகளை அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றவே மாட்டாதாம்

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் பந்துல

ஊடகவியலாளர்களை முடக்கும் கொள்கைகளை அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றாது. ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், ஆர்ப்பாட்டங்களின் மீது ஊடகவியலாளர்களும் தாக்குதலுக்கு உள்ளாகின்றமை தொடர்பில் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் –

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்காக அரசாங்கத்தால் ஊடகவியலாளர் அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அடையாள அட்டை தொடர்பில் பாதுகாப்பு பிரிவினரால் போதுமான அவதானம் செலுத்தப்படும்.

எனினும் ஏதேனுமொரு ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் அல்லது வேறு அழுத்தங்கள் காணப்பட்டால் அது தொடர்பாக எமக்கு தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாறாக ஊடகங்களை ஒடுக்கும் கொள்கையை அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றவில்லை. ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பது முக்கியத்துவமுடையது என்பதே எமது கொள்கையாகும். – என்றார்.





சாவகச்சேரி பாரதி பாலர் முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறன் கண்காட்சி செவ்வாய்க்கிழமை முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.

கண்காட்சி நிகழ்வில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ரஜனிகாந்தன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு ஆக்கத்திறன் கண்காட்சி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இதன்போது முன்பள்ளிச் சிறார்களின் கை வண்ணத்தில் உருவாக்கப்பட்ட காட்சிப் பொருட்கள் பலவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.04.2023 இல் வெளியிடப்பெற்றது.